
மூதூர் உமறு நெய்னாப்புலவரின்

# கவிநயம்



கே.எம்.எம்.இக்பால்



மூதூர் உமறு நெய்னாப் புலவரின்

# கவி நயம்

**கே. எம். எம். இக்பால்**

# நூல் விபரப்பட்டியல்

தலைப்பு :- மூதூர் உமறு நெல்லைப்புலவரின் கவிநயம்

ஆசிரியர் :- கே.எம்.எம். இக்பால்

முதற்பதிப்பு :- 2007 மே

உரிமை :- ஜாஹிறா இக்பால்

தாளின் தன்மை :- 70Gsm

நூல் வடிவமைப்பு :- எம்.ஐ.எம். நஸார்

நூலின் அளவு :- A5

மொத்த பக்கங்கள் :- viii + 66

அச்சிட்டோர் :- றெயின்போ மினிலேப், திருகோணமலை.
026 2227498, 2227354

வெளியீட்டோர் :- வானவில் பதிப்பகம், திருகோணமலை.
0712 340194

ISBN :- 978-955-1098-07-0

விலை :- 100ரூபா

இந்நூல்

என்தந்தை மர்ஹூம் கச்சுமுகம்மது அவர்களுக்கும்

என்தாய் மர்ஹூமா கமீதும்மா அவர்களுக்கும்



# சமர்ப்பணம்

# அணிந்துரை

இலங்கையின் பட்டதாரி ஆசிரிய சேவையில் இணைந்து துடிப்புடன் பணியாற்றி பல இடங்களிலும் கல்விச் சேவையாற்றியதோடு தற்போது கிண்ணியா கோட்டக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் கே.எம்.எம். இக்பால் அவர்கள் ஆசிரிய ஆலோசகர் மட்டுமல்லாது சிறந்த கவிஞனும், கலைஞனுமாவார்.

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வகையம்'' எனும் கூற்றிற்கேற்ப தனது கைக்கெட்டிய மூதூர் உமறு நெய்னாப் புலவர் எழுதிய சில இலக்கியப்படைப்புக்களைப் படித்தறிந்து அதன் பொருளாழத்தையும் சுவைநயங்களையும் சுவைத்ததினால் ஏற்பட்ட மனவேட்கையினால் கவிஞர்கள் இலக்கியவாதிகள், மொழிவல்லுனர்கள், கல்விமான்கள் ஆகியோரின் கண்களுக்கும் எட்டவைக்கும் நோக்கோடும் புலவர் கூறும் ஒழுக்க விழுமியங்களும், நற்பண்புகளும், அறிவுரைகளும் மக்களில் மனங்களிலே காலூன்ற வேண்டுமென்ற மன மகுடத்தில் ஆசிரியர் கே.எம்.எம். இக்பால் எழுதிய நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தனது ஆசிரிய சேவையின் போது தமிழ் மொழியை உயர் வகுப்புகளுக்கு போதித்ததின் மூலம் பெற்ற அனுபவங்கள் சங்க இலக்கியங்கள் தமிழ் கூறும் நல்லிலக்கியங்கள் 20 ம் நூற்றாண்டின் உள்நாட்டு, பிறநாட்டு புலவர் தேசிய விநாயகப்பிள்ளை போன்றோரின் இலக்கியப்படைப்புக்களை ஆய்வுகள் செய்ததின் மூலம் பெற்றுக் கொண்ட கவிதைச்சுவை, கவிநயம் கவிவரவு, என்பவைகளோடு மூதூர் உமறு நெயினா புலவரின் ஆக்கங்களான சிந்துகவியிலான புகாரிக்காவியம், வெண்பாவிலான நபிமொழிகள், அன்றைய அரேபியா, பெண்கல்வி சோபனம், குறட்பாவிலான இஸ்லாமிய ஒழுக்க நெறி என்பவைகளை பொருள் நயம், யாப்பமைதி, இலக்கணமரபு, மொழிவளம், கருத்தாழம் என்ற அடிப்படையில் ஒப்பு நோக்கி ஆய்வு செய்து சிறந்த எடுத்துக்காட்டுகளை ஒப்பீடு செய்து கற்றோரும் மற்றோரும் ஏற்கும் வண்ணம் கவிநயம் படைத்துள்ளார்.

சிரமம் பாராது மேற்கொண்ட இவ்வாசிரியரின் இலக்கிய வளமிக்க இப்படைப்பு மக்கள் மத்தியில் மதிப்பும் வெற்றியும் பெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் வாழ்த்துகிறேன்.

ஜனாப் M.A.சமது
(ஓய்வு பெற்ற அதிபர்,தரம்1)
அகில இலங்கை சமாதான நீதவான்

நெய்தல் நகர்
மூதூர் - 1

# நயப்பதற்கு முன் ..........

தமிழ் மொழி இன்று உலகின் செம்மொழிகளுள் ஒன்றாகத் திகழ்ந்திட - பல இலக்கிய வளங்களைப் பெற்றுச் சிறந்திட - பலர் காரணகர்த்தாக்களாக அமைகின்றனர். சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த சமயங்களைச் சேர்ந்த பலரது உழைப்பின் பயனாகவே, இன்று தமிழ் நங்கை அழகு தேவதையாக மிளிர்கின்றாள்.

இந்தவகையில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூதூரிலே பிறந்து, தனது புலமையாற்றலால், பல பாமாலைகளைப் புனைந்து, தமிழை வளப்படுத்தியவரே மூதூர் உமறு நெய்னாப் புலவர் ஆவார். அவரது கற்பனைத் தோட்டத்திலே மலர்ந்த இலக்கிய மலர்களாக புகாரிக் காவியம், அராபிய நாட்டின் அன்றைய நிலை, இஸ்லாமியக் குறள், சோபனம், நபிமொழிகள் (வெண்பா), பெண் கல்வி முதலியன அமைகின்றன. இவை ஒரு முஸ்லிம் மகனின் தமிழ்ப்பற்றையும், சமூக உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வளவு இலக்கியங்களையும் அவர் இயற்றிய போதிலும், எந்த இலக்கியத்தையும் அச்சுவாகனம் ஏற்றிட, அன்று அவருக்கு வசதி இருக்கவில்லை. அவரின் நூல்களை அச்சில் கொண்டு வரும் பல்வேறு முயற்சிகளும், இன்று வரை வெற்றி இலக்கை அடையவில்லை. 2002ம் ஆண்டில் பொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில், இவரது கவிதைகள், இன்னும் சிலரது கவிதைகளோடு "பாவாரம்" என்ற தலைப்பில் ஒரு நூலுருவில் வெளியிடப்பட்டன.

மூதூர் உமறுநெய்னாப் புலவரின் செய்யுட்கள் இலக்கிய ஆர்வலர்களின் கண்களில் படவேண்டும் என்பதற்காகவும், அவர் கூற வந்த கருத்துக்கள் மக்கள் இதயங்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவுமே, இந் நூலை நான் எழுத விரும்பினேன்.

மூதூர் உமறுநெய்னாப் புலவரின் செய்யுட்களிலுள்ள சிறப்புக்களை சாதாரண மக்களும் அறிய வேண்டும் என்பத்றகாக,

அவரது ஆறு இலக்கியங்களிலிருந்து சில செய்யுட்களை எடுத்து, அவற்றை ஏனைய இலக்கியங்களோடு ஒப்பிட்டு இந்நூலில் எழுதியுள்ளேன். மறைந்த எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்தின் மாமனாரான சவரிமுத்துப் புலவரின் நெருங்கிய சகாவான உமறுநெய்னாப்புலவர், மூதூரின் மூத்த ஆசிரியராவர். அவரின் கல்விப் பணியில் விளைந்த மணிகளில் ஒருவராக எனது தந்தை மர்ஹூம் எம்.எம்.கே.முகம்மது அவர்கள் விளங்குகிறார். (மூதூர் மத்தியகல்லூரியின் முன்னாள் அதிபர்)

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய ஓய்வுபெற்ற அதிபர் எம்.ஏ.சமது அவர்களுக்கும், இந்நூலை சிறப்புற அச்சிட்ட வானவில் பதிப்பகத்தாருக்கும் என் நன்றிகளை காணிக்கையாக ஆக்குகின்றேன்.

**- கே.எம்.எம்.இக்பால் -**

**கட்டையாறு**
**கிண்ணியா - 4**
**026-2236931**

# உள்ளே !

பக்கம்

புகாரிக் காவியம் 01

அராபிய நாட்டின் அன்றைய நிலை 08

இஸ்லாமியக் குறள் 21

சோபனம் 30

நபி மொழிகள் (வெண்பா) 37

பெண்கல்வி 47

பிற்சேர்க்கை

மூதூர் உமறு நெய்னாப் புலவர்
வ.அ.இராசரத்தினம் 56

உமறு நெய்னாப் புலவர்
எம்.ஏ.சமது 61

இலங்கையர்க்கோனுக்கு
புலவர் எழுதிய கடிதம் 64

புலவரின் குடும்பம்
எம்.எம்.ஏ.அனஸ் 65

# புகாரிக் காவியம்

மூதூர் உமறுநெய்னாப் புலவர் தமிழ்மொழி தழைக்க- இஸ்லாமியர்களின் இதயங்களில் பக்தி நறுமணம் என்றும் கமழ - ஆக்கிய இலக்கியங்களுள் புகாரிக் காவியம் முக்கியமானது. இக்காவியத்தில் புகாரிக் கந்தூரி நடைறெும் மூதூரின், இயற்கையழகைப் புலவர் பல பாடல்களிலும் சிறப்பித்துக் கூறுகிறார்.

இலங்கையின் மிக நீளமான நதியான மகாவலிகங்கை மூதூருக்கு அருகாமையில் ஓடி, கடலோடு சங்கமமாகின்றது. ஒரு புறம் வங்கக்கடலும், மறுபுறம் மகாவலி கங்கையும் சூழ்ந்திருக்கும் வளமும், வனப்பும் உள்ள புண்ணிய பூமியே மூதூர் ஆகும். மூதூரின் வரலாற்றை நூலுருவில் தந்த ஒய்வு பெற்ற அதிபர் எம்.ஏ.சமது அவர்கள்,

திருகோணமலையின் தெற்கே கொட்டியாரக் குடாவின்
ஓரத்தில், இந்து மாதிரையின் ஏற்றமிகு தாலாட்டில்,
வங்கக் கடலலையின் வண்ணமிகு ஒசையிலே,
மகாவலி கங்கையவள் மாண்பு மிகு மடியெனவே
விரிந்திருக்கும் நிலமகளே மூதூராகும்.

என்று மூதூரின் சிறப்பை அழகாக் குறிப்பிடுகிறார். தமிழ் இலக்கியங்களிலே காணப்படும் நாடு நகர வருணனைகள், இலக்கிய நெஞ்சங்களைக் குளிர்விக்கும் பாங்குடையன. சங்க காலத்தில் எழுந்த எல்லாச் செய்யுட்களுமே உயர்ந்த கற்பனையையும், சிறந்த இயற்கை வருணனையையும் கொண்டனவாக அமைகின்றன. சங்க இலக்கியங்களுள் முதன்மையானது புறநானூறு ஆகும். அந்த நூலிலே வெள்ளைக் குடிநாகனார் இயற்றிய இனிய பாடல் ஒன்று உள்ளது.

“சூரியன் திசைமாறித் தோன்றினாலும், வெள்ளி தனது நிலையிலிருந்து தளர்ந்தாலும், உனது நாட்டின் செழுமை என்றும் குறையாது. வளமான காவிரிநீர் பாய்வதனால் கணுக்களையுடைய கரும்பும் நெல்லும் உன்பதியிலே என்றும் நிறைந்திருக்கும்” என்ற பொருள்படஅப்பாடல் பின்வருமாறு அமைகின்றது.

வலங்கு கதிர் கனலி நால் வயிற் றோன்றினு
மிலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினு
மந்தண் காவிரி வந்துகவர் பூட்ட
தோடுகொள் வேலின் தோற்றம் போல
வாடு கரும்பின் வெண் பூ நுடங்கும்

உமறு நெய்னாப் புலவரும் தான் பிறந்த மூதூரின் பேரெழிலை, பின்வரும் கவிதை மூலம் எமக்குக் காட்டுகிறார். பொங்கிவரும் மகாவலி நதிபாய்வதால் செந்நெல்லும் கரும்பும் மலிந்துள்ள மாட்சி பெறு பூமி மூதூர் என்று பாடுகிறார்.

புவியினில் விளங்குமிம் மூதூ ரெனும் பதி
பொங்கு நதி பாய்வதாலெங்கும் வளமாகி
கவினொழுகு செந் நெலொடு கன்னலு மலிந்து
காட்சி தரு கின்ற மாட்சி பெறு நாடு.

(பொருள் :- பூமியிலே உள்ள மூதூர் எனப்படும் இடமானது, பொங்கிவரும் நீரினைக் கொண்ட மாவலிநதி பாய்வதால், வளம் பெற்று, இனிமைமிக்க செந்நெல்லும் கரும்பும் அதிகம் காணப்படும் அழகும், பெருமையுமுள்ள ஒரு பிரதேசமாகும்.)

சோழர் காலத்திலே எழுந்த ஒரு பக்திக் காப்பியமான பெரிய புராணத்தைப்படைத்து, தமிழ் அன்னையின் திருப்பாதங்களில் அதைச் சமர்ப்பித்தவர் சேக்கிழார் சுவாமிகள் ஆவார். அவர் திருவாரூரின் சிறப்பினைக் கூறும்போது, அந்த நகரம் நிலமகளின் அழகிய திலகம் போன்றும், இலக்குமி இனிதே வாசஞ்செய்யும் எழில்மிகு தாமரை போன்றும் காணப்படுகிறது என்கிறார்.

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல் மலர்ந்
தலகில் சீர்திரு வாரூர் விளங்குமால்

இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழ்இலக்கியம் செழுமை பெற - குழந்தை இலக்கியம் வளங்களைப் பெற்று ஏற்றம் பெற்றிட - தன்னை அர்ப்பணித்த சோமசுந்தரப்புலவர், யாழ்ப்பாணத்தைப் பற்றி

பல கவிதைகளை இயற்றியுள்ளார். எண்சாண் உடம்புக்கு சிரசு எவ்வாறு முக்கியம் பெறுகிறதோ, அது போல இலங்கையின் சிரசான யாழ்ப்பாணமும் முக்கியம் பெறுகிறது என்று பின்வரும் கவிதையின் மூலம் அவர் கூறுகின்றார்.

எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடும்
என்றெ யுரைப்ப ரதுபோலப்
பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்
புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம்.

மூதூர்த் தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வனான மூதூர் உமறுநெய்னாப் புலவர், தான் பிறந்த மூதூரின் சிறப்புக்களை, இனிய தமிழ்க் கவிதைகளில் வடித்து நெஞ்சம் மகிழ்கின்றார். மூதூரிலே மருதம், நெய்தல்,குறிஞ்சி,முல்லை ஆகிய நால்வகை நிலங்களுமே நிறைந்து காணப்படுகின்றன. இதனால் மூதூரை வயல்கள் நிறைந்த மருதம் என்று கூறுவதா? அல்லது கடல்வளம் காணப்படுவதால் அதனை நெய்தல் என்று அழைப்பதா? என்று புலவருக்குத் தடுமாற்றம் ஏற்படுகின்றது. அந்த அளவிற்கு நால்வகை நிலங்களும் மலிந்துள்ள ஏற்றமிகு ஊரே மூதூர்.

நாட்டை யான் மருதநிலமென்று சொல்வேனா?
நற்கடற் சாரு மொரு நெய்த லென்பேனா?
நீட்டிய மலைசாரற் குறிஞ்சிநிலமாமோ?
நெடுங்கான முல்லை நிலமென்று பகர்வேனோ?

(பொருள் :- நாட்டை(மூதூரை) நான் மருத நிலம் என்று கூறுவேனா? அல்லது நல்ல கடல் சார்ந்துள்ள ஒரு நெய்தல் நிலம் என்று அழைப்பேனா? அல்லது உயர்ந்த மலைகள் அமைந்துள்ள குறிஞ்சி நிலம் என்று பகர்வேனா? அல்லது பரந்த காடுகள் மலிந்த முல்லை நிலம் என்று இயம்புவேனா?)

சத்தியத்தையும், ஒழுக்கத்தையும் தம் பண்புகளாகக் கொண்டிடாமல், நாகரிக போதையிலே ஆழ்ந்தவர்களாக - ஒழுக்க மில்லாத மாக்களாக அன்று மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். மனித விழுமியங்களை நிலை நாட்டுவதற்காக, பாடசாலைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளும், ஆசிரியர்களின் அரும்பணிகளும் வீணாகிப் போன நிலமையைக் கண்டு, பண்புள்ளம் கொண்ட எந்த

மனிதரும் வேதனையடையவே செய்வார். இவ்வாறு தவறான பாதையில் திசைமாறிச் செல்கின்ற மக்களைப் பார்த்து, கவிஞர் திலகம் அப்துல்காதர் லெப்பை கண்ணீர் விட்டார். அவரது கண்ணீர்த்துளிகள், கவிதைவரிகளாய், ''போதனை இடம் மாறிவிட்டது.'' என்ற தலைப்பில் பின்வருமாறு வெளிவந்தன.

ஒழுக்க வழக்கம் பழக்கமெல்லாம்
ஒரு கால் உரைத்த பள்ளிகளும்
விழுப்பம் மிகுந்த குருபீடம்
வீணே யாவும் ஆகினவே!
பழக்கம் கூறும் வானொலியும்
பாடும் பேசும் திரைநிழலும்
முழுக்க இன்று போதனையை
முற்றுங் கொண்டன கண்கூடே!

ஒழுக்கத்தை மாசடையச் செய்யும் பணியை வானொலி, சினிமா முதலிய ஊடகங்களே வெற்றிகரமாக நிறைவேற்றின என்பதே, கவிஞர் திலகத்தின் கணிப்பு.

இன்று சமூகம் ஒழுக்கப் போர்வையை அகற்றி, நிர்வாணமாக நிற்கும் நிலை கண்டு, மார்க்கக் கல்வியில் துறைபோன உலமாக்கள் சிந்தித்தனர். அந்தச் சிந்தனையின் வெளிப்பாடாக - சமுதாயம் கறைகளைக் களைந்து, நிறைகளைப் பெற்றுச் சிறந்திட வேண்டும் என்ற வேட்கையின் வெளிப்படாக - மூதூர் நத்வதுல் உலமா சபை தோற்றம் பெற்றது. நாட்டிலே நெறிகுன்றி, அறிவு மங்கி மக்கள் வாழ்வதை, உலமாக்கள் தம் சிந்தையில் கொண்டார் என்பதை, பின்வரும் பாடல் மூலம் உமறு நெய்னாப்புலவர் எமக்குக் காட்டுகிறார்.

நாட்டிலே வாழ்கின்ற மக்கள் நெறிகுன்றி
நல்லறிவு தரும் மார்க்க ஞானமுமின்றி
தேட்டமாய்க் கல்வி பயில் நாட்டமு மறந்து
திரிவதை யுலமாக்கள் சிந்தையிலுணர் ந்தார்.

(பொருள் : நாட்டிலே வாழ்கின்ற மக்கள் ஒழுக்க நெறி தவறியவர்களாக, நல்ல வழியைக் காட்டும் மார்க்க அறிவும் இல்லாதவர்களாக, ஆசையோடு கல்வியைப் படிக்கும் ஆர்வமுமில்லாதவர்களாக வீணாக வாழ்வதை, உலமாக்கள் கவலையுடன் நோக்கினார்கள்.)

அறியாமை இருளதனைத் துரத்தி, அறிவென்றும் அகல் விளக்கை ஏற்றிட, பூமியில் உதித்தவரே பூமான் நபியவர்கள். அண்ணல் நபியவர்களின் போதனைகள், பக்கத்து வீட்டாரை பரமவைரிகளாகக் கொண்டு பாதகங்களை புரிந்த மனிதர்களை, பண்பாளர்களாக மாற்றின. துர்க்குணம் நிறைந்த உள்ளங்களெல்லாம், மாநபியின் வார்த்தைகளின் தாக்கத்தால், சாந்தியும் சமாதானமும் உறையும் பூஞ்சோலைகளாக மாற்றம் பெறற்ன. பெருமானாரின் பொன் மொழிகளைப் பின்பற்றி வாழும் போது, வாழ்க்கையில் இன்பம், என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். இக்கருத்துக்களை, புத்தளம் கவி சேக்க மரைக்கார் “பெண்மயில்” என்ற தலைப்பில் பின்வருமாறு தங்கத் தமிழிலே தருகிறார்.

பக்கத்து சனங்களுடன் பண்புடன் நடந்து கொள்வாய்!
துக்கமெனும் தோசமதை தூரவே எறிந்திடுவாய்!
தக்கவள் சொல் மாற்றமின்றி தரணியில் நடந்திடுவாய்!
தருமதுரை எங்கள் தலம் தனில் சொன் மொழி.

மாநபியவர்களின் வாக்கும் வாழ்வும் மண்ணில் வாழும் மனிதர்களுக்கு அறிவையூட்டி, அன்புடன் வாழும் நெறியையூட்டும், அற்புதங்களாக உள்ளன. இதனாலேயே மூதூர், உமறு நெய்னாப்புலவர் ‘‘அறிவூட்டும் நபிமொழிகள் ஆனதாம் அமுதம்” என்று கூறுகின்றார். நபிகள் நாயகத்தின் பொன்மொழிகள் அடங்கிய, அறிவுப் பெட்டகமே புகாரி சரீப் என்னும் புனித நூலாகும். அந்நூல் வேதனை களை அகற்றி இன்பங்கள் சேர்த்திடும் அற்புதமான நூல். மறையவனின் நல்லருளை மண்ணகத்திலும், விண்ணகத்திலும் இலகுவாக அடைய வழிகாட்டும் மாண்புள்ள நூல். அந்த நூலை உமறு நெய்னாப் புலவர் “நெறிகாட்டி ஒளியூட்டும் அந்நூல்...” என்று கூறுவதன் மூலம், வையகத்தில் வாழ்வாங்கு வாழும் வழிகளை அந்நூல் காட்டுகிறது என்பது, எமக்குப் புலனாகிறது.

மனங்களில் படிந்துள்ள மாசுகளை அகற்றிட, மூதூர் நத்வதுல் உலமா சபையினர், புகாரி சரீப் கிரந்தத்தை 40 நாட்கள் ஓதினார்கள். அந்நிகழ்வை, உமறு நெய்னாப் புலவர், பின்வருமாறு தருகிறார்.

அறிவூட்டும் நபி மொழிகளானதா மமுதம்
அடங்கிய புகாரிசரீ பென்னும் நன்னூலே
நெறிகாட்டி யொளியூட்டும் அந்நூலைப் பக்தி
நேமமாய் நாற்பது நாள் வரையி லோதி!

(பொருள் : அறிவை மனிதருக்கு வழங்குகின்ற நபிமொழிகள் என்ற அமுதத்தை உள்ளடக்கியதே, புகாரிசரீப் என்ற மேன்மையான கிரந்தமாகும். வாழும் வழிதெரியாது திண்டாடும் மக்களுக்கு, நெறிகாட்டி, ஒளியைப் பாய்ச்சிட, அக்கிரந்தத்தை நாற்பது நாட்கள் நேர்த்தியாக ஓதினார்கள்.)

சாதாரண மனிதர்களை விடவும் கற்பனைத் திறனிலும் வருணனையாற்றலிலும் கவிஞர்கள் ஒருபடி உயர்ந்தவர்கள் ஒரு காட்சியைக் கண்டு, உள்ளம் குதூகலித்து, தான் கண்ட இன்பத்தை ஏனையவர்களும் அடைய வேண்டும் என்பதற்காக, கவிதையிலே வடிக்கின்றனர்.

கவி நயத்துடன் தான் கண்ட காட்சியை வருணிக்கும் ஆற்றல் கொண்ட பெருமைக்குரிய, பல கவிஞர்களை ஈன்றெடுக்கும் வரத்தைப் பெற்றவள்தான் தமிழ் அன்னை. நாம். தினமும் கடற்கரை மணலைப் பார்க்கின்றோம். அம்மண் எமது உள்ளத்தில் ஏவ்வித குதூகலத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால்கடற்கரை மணலைப் பார்க்கும் ஒரு கவிஞனின் (பாரதிதாசன்) உள்ளம், அதைக்கண்டு எவ்வளவு குதூகலிக்கிறது என்பதை பின்வரும் பாடல் விளக்குகிறது.

ஊருக்குக் கிழக்கேயுள்ள பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல்வண்ணம் போல் மணல்மெத்தை
அம்மெத்தை மேல்
நேரிடும் அலையோ கல்வி நிலையத்தின் இளைஞர் போல்
பூரிப்பால் ஏறும் வீழும்; புரண்டிடும் பாராய் தம்பி !

கவிஞர்களின் கற்பனைகள் எமது உள்ளத்திலே, இன்ப அலைகளை உற்பத்தி செய்து, குதூகலத்தென்றலை பிரசவிக்கின்றன. தமிழ் மொழி கண்ட காவியங்களிலே, கற்பனைகளிலும் கவிச்சுவையிலும் தலைமை பெற்று விளங்கும் கம்பராமாயணத்திலே, ஒரு அழகான கற்பனை. கானகத்திலே வாசஞ்செய்யும் அண்ணன் இராமனைக் கண்டிட பெரும்படையுடன் வருகின்றான் தம்பி பரதன். அந்தப்படை அதிக எண்ணிக்கையுடைய வீரர்கள் நிறைந்த ஒப்பற்ற படை. "அந்தப் படை கடலை விடவும் பெரியது... படையைப் பார்த்துவிட்டு கடலைப் பார்த்தால் கடல் சிறிது போலத் தென்படும்...." என்று கவியரசர் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

செழுந்திரைப் பரவையைச் சிறுமை செய்த அக்
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான்.'

கற்பனையாற்றலிலே மிக உயர்ந்து விளங்கிய மூதூர் உமறு நெய்னாப்புலவரும், கவிச்சுவைமிக்க பலசெய்யுட்களைப் படைத்து, இலக்கிய நேசர்களின் இதயங்களைக் களிப்பூட்டுகிறார். மூதூரிலே நடைபெறும் புகாரிவிழாவிலே பங்குபற்றி நன்மைகள் பலவற்றை கொள்ளையடிக்கவேண்டும் என்ற நோக்கில் நாலாபுறத்திலிருந்தும் மக்கள் அலை அலையாக வருகின்றனர். கடலைப் போல மக்கள் திரண்டனர் என்றோ, சமுத்திரம் போல பரந்து நின்றார்கள் என்றோ கூறுவதிலோ திருப்தியடையாத புலவர், யாராலுமே எண்ணி முடிக்கமுடியாத பெருங்கூட்டம் என்று குறிப்பிடுவதிலிருந்து, அவரது கற்பனையாற்றலை அறிந்து கொள்ளலாம்.

இருப்பிடமான எம்மூதூரிலே யுள்ள
எழின் மிக்க புகாரியின் சிறப்பைக் காண
வருகின்ற பிரதேச மக்கள் எண்ணிக்கை
வகுக்க முடியாதிங்கு வந்து காண்பீரே!

(பொருள் :- நாம் வாழ்கின்ற மூதூரிலே இடம் பெறுகின்ற, பெருமைமிக்க புகாரியின் சிறப்பைக் கண்டிட, நாலாபுறத்திலிருந்தும் பல மக்கள் வருவார்கள். அம்மக்களின் எண்ணிக்கை இவ்வளவு என்று அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. எனவே அவ்வாறான சிறப்பை, நீங்களும் வந்து காணுங்கள்.)

# அராபிய நாட்டின் அன்றைய நிலை

அகிலத்திற்கோர் அருட்கொடையாகப் பிறந்த அண்ணலார் பிறப்பதற்கு முன்பு, அரேபியா எவ்வாறு இருந்தது என்பதனை இனிய தமிழில், எளிய நடையில் மூதூர் உமறுநெய்னாப் புலவர் எமக்குச் சித்தரித்துக் காட்டுகிறார்.

மனிதகுல வரலாற்றை வரலாற்றுக் கண்கொண்டு நோக்கிய புலவருக்கு, ஆரம்பத்தில் தனித்தனியாக வாழ்ந்த காட்சியும் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாக்கக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த காட்சியும் தென்படுகின்றன. அதனை விபரிக்கப் புலவர்,

பாரினாளடைவில் மக்களும் பெருகிப்
பற்பல குழுக்களாய்க் கூடி

என்று பாடினார். ஆரம்பத்தில் காயுங் கனியும் இலையும் கிழங்கும் உண்டு வாழ்ந்த மனிதன் நாளடைவில், நதிக்கரை தன்னில் பயிர்செய்வதற்கும், மந்தைகளை வளர்த்து பயன்பெறுவதற்கும் கற்றுக்கொள்கின்றான். மனிதனின் இந்த படிமுறை வளர்ச்சியை புலவரது பின்வரும் பாடல்வரிகள் புலப்படுத்தப்படுகின்றன.

நீர்வள மிகுந்த நதிக்கரையிடத்தும்
நிரைகள் மேய்த்திடு புற்
சார்புறுமிடத்தும் வாழ்ந்தரன்னார்.

இப்பாடல்வரிகள் மூதூர் உமறுநெய்னாப் புலவர் ஆற்றல் மிக்க ஒரு இலக்கியவாதி மட்டுமல்ல, ஒரு சிறந்த வரலாற்றாசிரியருங்கூட என்பதைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாறான வளர்ச்சிகண்ட உலகமக்கள் ஏற்றம் பெறுவதற்காகவும், மனித விழுமியங்களிலே மேன்மை பெறவும், அறிவு ஞானக்கலைகளிலே ஆற்றல் பெற்றிடவும், பல நபிமார்கள் பூவுலகிலே அவதரித்தார்கள். இக்கருத்துக்களை தங்கத்தமிழில் மூதூர் உமறுநெய்னாப்புலவர் பின்வருமாறு தருகின்றார்.

பாரினாளடைவில் மக்களும் பெருகிப்
பற்பல குழுக்களாய்க் கூடி
நீர்வள மிகுந்த நதிக்கரையிடத்தும்
நிரைகள் மேய்த்திடு புற்

சார்புறு மிடத்தும் வாழ்ந்தனரன்னார்
தக்கதாம் முறையினி லொழுகும்
தேர்ச்சியும் ஞான கலைகளும் பயிற்றத்
திரு நபி யெண்ணில ருதித்தார்.

( பொருள் :- உலகில் சனத்தொகை அதிகரிக்க, தனிமனிதனாய் வாழ்ந்த மனிதன், குழுக்களாய் வாழ முற்பட்டான். அவன் விவசாயம் செய்ய நதிக்கரைகளிலும், மந்தைகளை மேய்த்திட புல்வெளிகளிலும் வாழ்ந்தான். இவ்வாறு வாழ்ந்த மனிதரை நேர் வழிப்படுத்தவும் அறிவியல்கலைகளைப் போதிக்கவும் எண்ணிக்கையில்லா நபிமார்கள் இப்பூமியில் பிறந்தார்கள்.)

மனிதகுல வரலாற்றில் அனாச்சாரங்கள் எங்கு அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அங்கு மக்களை நல்வழிப்படுத்த நபிமார்களை இறைவன் அனுப்பினான். அவர்கள் பாவ இருளைப் போக்கி, மாசடைந்த மக்களின் மனங்களைத் தூய்மைப்படுத்தி, மக்கள் நேரான பாதையில் சென்றிட, ஞானதீபத்தை ஏற்றிவைத்தார்கள். இதனைப் பின்வருமாறு பாட்டாய்த்தருகிறார், பாவலர் உமறுநெய்னாப் புலவர்.

இவ்வன மொவ்வோர் சமூகங்களிடத்தும்
இய நபிமார்கள் வந்துதித்து
செவ்வணம் நடக்கும் விதமதும்....

(பாவ வெள்ளத்தில் முழ்கி மீளா நரகத்தை அடைய இருந்த மக்களைக் காப்பாற்றி ஆற்றுப்படுத்தவே கருணா மூர்த்தியான இறைவன் நபிமார்களை அனுப்பினான்.)

இறுதி நபியான முகம்மது (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன், ஈசா நபியவர்கள் அவதரித்தார்கள். நெறிபிறழ்ந்திருந்த மக்களை, மனிதர்களாக மாற்றி - கொலையும், பழியும் நிறைந்திருந்த சமூகத்தைச் சீர்ப்படுத்தி, மக்களை இறைநேசர்களாக மாற்றிட, ஈசா நபியவர்கள் பெரிதும் உழைத்தார்கள். அவர்கள் மறைந்த பின், மீண்டும் மக்களின் வாழ்விலே, பாவ இருள் படந்தது. களவும், கயமையும் மக்கள் வாழ்வில் முக்கிய பண்புகளாக மாறின. சிந்தனைகள் எதுவுமின்றி - சீர்திருத்த யாருமின்றி - அவலம் தொடர்ந்துவர, நூறாண்டுகள் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதனை உமறுப்புலவர்,

......ஈசாநபி போயதற் பின்
எவ்வித சமய குரவருமின்றி
இருந்ததவ் விடை நெடுங்காலம்

என்று கூறுகிறார். ஈசா நபிக்கும் முகம்மது நபி(ஸல்) அவர்களுக்கும் இடைப்பட்ட காலம் அறியாமைக் காலம் (அய்யாமுல் ஜாஹிலியா) என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

இவ்வன மொவ்வோர் சமூகங்களிடத்தும்
இய நபிமார்கள் வந்துதித்து
செவ்வணம் நடக்கும் விதமதுவும் வணக்கச்
செயல்முறை யீதென்று மோதி
இவ் வினி லீசா நபியும் போயதற்பின்
குறுக்கு மோராறு நூறாண்டு
எவ்வித சமய குரவரு மின்றி
இருந்ததவ் விடை நெடுங்காலம்

(பொருள் :- இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகங்களுக்கு வழிகாட்ட பல நபிமார்கள் பிறந்து, நேர்வழிநடக்கும் விதத்தினையும், இறைவனை வணங்கும் முறையினையும் விளக்கிக் காட்டியுள்ளார்கள். ஈசா நபி மறைந்து நூறு ஆண்டுகளாக எந்த நபியும் பிறக்கவில்லை. இக்காலத்தில்...,)

**அராபிய நாட்டின் அன்றைய நிலை**

பெருமானீரவர்கள் பிறப்பதற்கு முன்பு அரேபியா மட்டுமல்ல, அகில உலகமுமே அனாச்சார வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தது. மேய்ப்பான் இல்லாத மந்தைகள் போல, மாலுமி இல்லாத கப்பலைப் போல, முறைதவறி - நெறி பிறழ்ந்து - மக்கள் வாழ்ந்தனர். இந்த இழிநிலை ஏற்படுவதற்கு "வழிகாட்டி" இல்லாது போனதே, முக்கிய காரணம் என்று, உமறுநெய்னாப்புலவர் கூறுகிறார்.

அந்த அறியாமைக் காலத்தில் வாய்மையையும், ஒழுக்கத்தையும், நேர்மையையும், நெறிமுறையையும் காண்பது அரிதாக இருந்தது. வாழ்க்கையின் நலன்களுக்குக் கேடான பொய்யும், புரட்டும், துயரமும், வஞ்சகமும், சினமுமே விஞ்சியிருந்தன. இக்குணங்கள் மனித

வாழ்வைத் தின்றுவிடும் என்பது, அப்துல் மஜீதுப் புலவரின் ஆணித்தரமான கருத்தாகும். இக்கருத்துக்களை அவர் தனது "ஆசாரக்கோவையில்" அழகாகத் தருகிறார்.

பொய்யுரைத்திடல் வாழ்வினைத்தின்றிடும்
புறனி நற்றவம் யாவையும்தின்றிடும்
நையு மாகுல மாயுளைத் தின்றிடும்
நல்கு மீகையி டுக்கணைத் தின்றிடும்
செய்யும் வஞ்சக நன்மையைத் தின்றிடும்
சினவு வெஞ்சினம் புத்தியைத் தின்றிடும்.

வாழ்க்கையின் நலன்கள் அத்தனையையும் சுட்டெரிக்கின்ற, ஈனப்பண்புகள் அனைத்தும் அய்யாமுல் ஜாஹிலியா காலத்தில் நிறைந்திருந்தன. இக்கருத்துக்கள் அனைத்தையும் சுருக்கி "வான்குபிர் எங்கும் பரந்தது..." என்று இனிமையாகப் புலவர் கூறுகிறார்.

அறிவொளி இல்லாது - ஞானபானுவின் சுடரொளி கிடைக்காது - வாழும் வழி தெரியாதவர்களாக, அக்கால மக்கள் வாழ்ந்தார்கள். அதனால் அறியாமை இருள் அகிலத்தை ஆட்கொண்டது என்று, புலவர் விளக்க முற்படுகிறார்.

ஆன காலை யறிவின் சுடர்தரு
ஞானபானு மறைந்தது நானிலம்
ஈனவன் குபிரா மிருளெங்கனும்
சேனையோடும் செறிந்து பரந்ததுவே.

(பொருள் :- அக்காலத்திலே அறிவின் சுடர் அணைந்தது. இவ்வுலகில் அறியாமை என்ற இழிவான இருள் எங்கும் செறிந்து பரந்தது.)

அன்றைய அரேபியமக்கள் உருவம் இல்லாத தூயவனான இறைவனை வணங்கவில்லை. மாறாக மனிதனால் உருவாக்கப்பட்டு சிலைகளையே வணங்கினார்கள். இந்நிலைமையினை உமறு நெய்னாப்புலவரின்

மக்கள் தூயனை வணங்கார்
செய்த கற்சிலை வணக்கஞ் செய்வர்.

என்ற பாடல்வரிகள் சித்தரித்துக் காட்டுகின்றன. ஆக்கவும்

அழிக்கவும் வல்ல ஏகனைச் சிரம் தாழ்த்தாது, மனிதன் செய்த உருவச் சிலைகளுக்கே அக்கால மக்கள் தலைவணங்கினார்கள் என்று உமறுநெய்னாப்புலவர் மனம் நொந்து கூறுகிறார். இதனால்தான் அன்றைய அரேபியா பண்பிழந்து, பசுமையிழந்து, பாழ்பட்டுக்கிடந்தது.

மேலும் மறு உலக வாழ்க்கையை மறந்து இவ்வுலகமே நிலையான சுவர்க்கம் என்று கருதி மதுவையும், மாதையும் தம் இருகண்களாகக் கொண்டு அன்றைய அரேபியர் வாழ்ந்தனர். சிற்றின்ப உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய ஆபாசப்பாடல்களை எவ்விடத்தலும், எந்நேரத்திலும் பாடி நிலைதடுமாறி அவர்கள் வாழ்ந்தார்கள் தனிமையில் வீடுகளில் மட்டுமல்ல, சனநடமாட்டமுள்ள, சந்தைகளிலும், மக்கள் திரியும் பாதைகளிலும், ஆலோசனை நடத்தும் மண்டபங் களிலும், பெரிய அவைகளில் கூட, ஆபாசப்பாடல்களைப்பாடுவது, பெருமைக்குரிய விடயம் என்று அவர்கள் எண்ணினர்.

அரேபியா மட்டுமல்ல தீய நடத்தையுடைய மக்கள் வாழும் எந்த இடமும், பாழ்பட்டுவிடும் என்பது வெள்ளிடைமலையாகும். அவ்வாறான ஒரு இடத்தை ஔவையாரும் குறிப்படுகிறார். நடுநிலைப்பண்பு தவறும் மனிதர்கள் வாழும் வீடானது பாழ்பட்டு எருக்கஞ்செடி வளரும் ஒரு் இடமாக ஆகிவிடும். அங்கு மூதேவியும் சென்று குடியிருக்கும். பின்வரும் ஔவையாரின் பாடல் இதனை விளக்குகிறது.

வேதாளஞ்செருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடி புகுமே
மன்றோரம் சொன்னார் மனை.

அறப்பண்புகளை இழந்த அரேபியாவும் ஆத்மீகத்திலும், ஒழுக்க நெறியிலும் மோசமான நிலையில் இருந்ததை உமறு நெய்னாப்புலவர் பின்வருமாறு பாடுகிறார்.

அன்றை ஞான்றிருந்த விந்த அரபி நாட்டியல்பு கொஞ்சம்
சொற்றிட றூற்றாம் மக்கள் தூயனை வணங்கார் செய்த
கற்சிலை வணக்கஞ்செய்வர் கல்வி நூலுடையார் செய்த
சிற்றின்பக் காதற்கீதம் செவிமடுத்தின்பந் துய்ப்பார்.

சந்தைகள் கூடும் பாங்கருந் சவ நடக்குந் தானம்
மந்தணம் பேசு மன்றம் மாபெரு மவைகள் கூட
வந்திரு மிடங்களெல்லாம் வனிதையரின்பக் காதல்
தந்திடு செய்யுள் யாத்தும் தனி மதிப்படைவரன்றோ

(பொருள் :- அன்றைய அரேபியாவின் நிலையைச் சொல்லப் போனால், மக்கள் தூயவனான இறைவனை வணங்காது இருந்தனர். மனிதனால் செய்யப்பட்ட கற்களையே வணங்கினர். சிற்றின்ப உணர்வை ஊட்டுகின்ற ஆபாசப்பாடல்களை அவர்கள், மக்கள் நிறைந்த பொது இடங்களிலும் கேட்டு பொழுதைக் கழித்தனர்)

ஒரு சமூகம் எவ்வளவு மோசமாக இருக்க முடியுமோ அவ்வ ளவு மோசமாக அக்கால அரேபிய சமூகம் இருந்தது. கொலையும், கொள்ளையும் பழியும், பாவமும் இவர்களது நாளாந்த வாழ்க்கையிலே இணைந்திருந்தன. அன்றைய அரேபியாவிலே நிலைபெற்றிருந்த மூன்று கேவலமான பண்புகளை, மூதூர் உமறுநெய்னாப்புலவர் கன்னித் தமிழில், சுவை சொட்டப் பாடியுள்ளார். அவையாவன,

01) தந்தையின் தாரம், அவரது மரணத்தின் பின்பு மகனின் உடமையாக மாறியது.
02) தங்களின் பெண்பிள்ளைகளை தாங்களே துணிந்து கொலை செய்தனர்.
03) சிந்தையைக் கெடுக்கும் கள்ளை அவர்கள் தினமும் உட் கொண்டனர்.

மது, மாது, கொலை இம் மூன்று பண்புகளும் அக்கால அரேபியாவைப்பீடித்திருந்த மூன்று நோய்களாகும். இப்பண்புகள் மூன்றும் சான்றோர்களாலும், இழித்துரைக்கப்பட்ட பண்புகளாகும். வள்ளுவர் கள்ளுண்ணாமை, பிறனில்விழையாமை, கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இப்பண்புகளின் இழிவைச் சுட்டிக்காட்டுகிறார்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்

உறங்குவதற்கும் இறப்பதற்கும் வேறுபாடு இல்லாதிருப்பது

போல நஞ்சை உட்கொள்பவர்களுக்கும் மது அருந்துபவர்களுக்கும் வேறுபாடு இல்லை.

பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதமை ஞாலத்து
அறம் பொருள் கண்டார் இல்

பிறருக்கு உரிய மனைவியை விரும்பும் அறியாமை, உலகிலே அறத்தை உணர்ந்தவர்களிடத்து இருக்காது.

நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி

உலகில் நல்ல அறம் என்று சொல்லப்படுவது, எந்த உயிரையும் கொலை செய்யாது இருத்தல் ஆகும்.

தந்தையின் மரணத்திற்குப் பின்பு அவ்வரது தாரத்தை மகன் தனது தாரமாக மாற்றிக் கொள்வதும் தான் பெற்றெடுத்த அழகிய பெண் குழந்தைகளை தன்கைகளாலேயே குழிதோண்டிப் புதைப்பதும், மதியைத் துரத்தும் மதுவை நாளெல்லாம் அருந்துவதும் அக்கால அரேபிய சமூகத்தில் நிலைபெற்றிருந்த பண்புகளாகும். இவற்றினாலேயே அக்காலச் சமூகம் கேடடைந்து, பண்பிழந்து போனது. இவ்வாறாக அக்கால அரேபியாவின் இழிநிலை, உமறு நெய்னாப் புலவரின் பின்வரும் பாட்டின்மூலம், எமது அகக்கண்களுக்குத் துலாம்பரமாகத் தெரிகிறது.

தந்தை வீழ்ந்ததற்குப் பின்னரன்னவர் தாரந்தன்னை
மைந்தருக் குடமையாக வைத்தினிதிருப்பரீன்ற
சுந்தரப் புதல்விமாரைத் துணிந்து கொன்றிடுவர் நல்ல
சிந்தையைக் கெடுக்குங் கள்ளை தினமுமுட் கொள்ளுவரே

(பொருள் :- தந்தையின் இறப்பிற்குப் பின்பு அவரது தாரத்தை மகன் தனது உடமையாக ஆக்கிக் கொள்வான். தான் பெற்ற அழகிய பெண்குழந்தையை தானே கொலை செய்வான். நல்ல அறிவை அழிக்கின்ற மதுவை தினந்தோறும் அருந்திடுவான்)

இஸ்லாம் சமயம் வெறுக்கின்ற ஓர் அம்சமாக வட்டி அமைகிறது. வட்டியானது உழைக்காமலே வருகின்ற வருமானம் ஆகும். அதன் மூலம் கிடைக்கின்ற பணத்தில் ஏழைகளின் கண்ணீர்படிந்திருக்கும். வட்டி வாங்குவது மனிதரின் இரத்தத்தை அருந்துவது போன்றதாகும். வட்டியை உமறுநெய்னாப்புலவர் பின்வருமாறு இழித்துரைக்கின்றார்.

"பலிசை (வட்டி) வாங்கி வறியவர்
உதிரமாந்தும் நிலையுடையார்"

இன்னொருவருடைய இரத்தத்தைக் குடிப்பது எவ்வளவு அருவருப்பானதோ, அவ்வளவு அருவருப்பானதே வட்டி எடுப்பதாகும். பாவச்சூட்டில் வெந்து, கருகிய பூமியை, அருள் மழையினால் குளிர வைத்த மாநபியவர்கள் வட்டியை உண்பவனையும் வட்டிக்கணக்கு எழுதுபவனையும், வட்டி கொடுப்பவனையும், ஸக்காத்தை தடைசெய்பவனையும் சபித்துள்ளார்கள். நபியவர்களின் சாபம், புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் பின்வரும் கவிதையில் பொதிந்துள்ளது.

வட்டிபறித்துண்டான் வட்டி கொடுத்தானாம்
வட்டி கணித்தான் வரிமுதலைத் - தட்டிக்
கழித்தான் நபியின் கடுஞ்சாபத் தீயிற்
குளித்தா னென் றெண்ணப்படும்.

மேலும் அக்கால அரேபியாவிலே மழைபெய்யாவிட்டால், தீப்பந்தத்தை எருதின் வாலில்கட்டி வேடிக்கை பார்க்கும் கேவலமான பழக்கமும் இருந்தது. மடமைகளின் இருப்பிடமாக வாழந்த அக்கால அரேபியர், ஞானக்காற்றை சுவாசிக்காத காரணத்தினால், பல்வேறு மூடக்கொள்கைகளின் நிலைக்களன்களாக வாழ்ந்தனர். அவர்களது தீயசெயல்களைச் சொல்லிமுடிப்பது இலகுவானதல்ல, என்று புலவர் கூறுவதிலிருந்து அவர்கள் புரிந்த மோசமான செயல்களின் எண்ணிக்கையை நாம் ஒருவாறு ஊகிக்க முடியும்.

மனிதரு பலிசை வாங்கி வறியவ்வ ருதிரமாந்தும்
நிலையினையுடையார் வானம் நெடுநிலம் பெய்யாதாகில்
இலகு தீப்பந்தஞ் சுற்றி எருதின்வால் கட்டுவாரால்
தலத்திலன்னார் செய்கை சாற்றுலாந் தகைமைத்தாமோ.

(பொருள் :- மனிதரிடமிருந்து வட்டியை வாங்குவதன் மூலம், அவர்களின் இரத்தத்தை அருந்தும் தன்மையை அடைந்தார்கள் வானம் மழையைத்தராது பொய்க்கும் வேளையில், எருதின் வாலிலே தீப்பந்தத்தைக் கட்டி வேடிக்கை பார்ப்பர். பூமியில் அவர்கள் செய்த தீவினையை கூறி முடித்திடமுடியுமா?)

அன்றைய அரேபியாவிலே பொய்யும், புரட்டும் சூதும்வாதும், கொலையும், கொள்ளையும் தலைவிரித்துத் தாண்டவமாடின. இறைதூதரொருவர் தோன்றி ஞானமழையை பொழிவிக்காத காரணத்தால், சூது, பொய், நெறிபிறழ்ந்த வாழ்வு, கொள்ளை என்ற முட்செடிகள் அந்த மண்ணிலே முளைத்தன.

சூதானது உள்ளத்திலே பல வேதனைகளை ஏற்படுத்துவதால், "இழிவை அருளும் சூது..." என்று உமறு நெய்னாப்புலவர் குறிப்பிடுகிறார். அக்கால அரேபியர், சத்தியத்தின் பேரொளியை என்றும் தீண்டாது வாழ்ந்தார்கள் என்பதைக் குறித்துக்காட்ட புலவர், "நாளும் பொய்மை பகருதல் விட்டு நீங்கார்...' என்று குறிப்பிடுகிறார்.

பொய்யையே வாழ்வாகக் கொண்டு மக்கள் இம் மண்ணிலே வாழ்வதை நினைத்து, கவிஞர் திலகம் அப்துல்காதர் அவர்களும் உள்ளம் நொந்து பின்வரும் கவிதையைத் தருகிறார்.

பொய்யே கலையாய் மாறியதால் போற்றும் விளம்பரப் பிரச்சாரம்
வையங் கண்ட அரசியலின் வாழ்த்துங் கலையா யாகியதே
மெய்யைப் பேசுத லரிதாக மேதினி பொய்யர் கூட்டமதாய்
ஐயம் நீங்கி மாறுவதை ஆரோ கண்டார் புதுமையிதே!

'பொய் இன்று ஒரு கலையாகவே ஆகிவிட்டது. இந்தப் பூமியானது பொய்யர் கூட்டம் வாழும் பதியாக மாறிவிட்டது' என்ற கவிஞர் திலகத்தின் பெருமூச்சுக்கள், கவிதைகளாக இவ்வாறு வெளிவந்தன.

இன்றைய உலகிலே மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் கூட்டத்தினர், எல்லா இடங்களிலும் நிறைந்து காணப்படுகின்றனர். இருபதாம் நூற்றாண்டில், தமிழ் உரைநடை புதுப்பொலிவுடன் செல்ல வழிவகுத்த இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவரான, பிச்சமூர்த்தி

வியாபாரி ஒருவன் கொள்ளையடிக்கும் தனது தொழிலை, பின்வருமாறு நியாயப்படுத்துவதாகக் கூறுகிறார்.

குங்குமத்தை தண்ணீரோடு
குலுக்கிக்கலர் செய்தேன்
தயங்காமல் உப்பைப் போட்டு
தனியான சோடா செய்தேன்

மனித வாழ்வு என்ற விருட்சத்தை அரித்து, நாசமாக்கக்கூடிய சூது, பொய், கொள்ளை என்ற மூன்று கிருமிகளும், அக்கால அரேபியர் வாழ்விலே அதிகம் நிலைகொண்டிருந்தன என்பதை, உமறுநெய்னாப் புலவர் பின்வருமாறு தருகிறார்.

இழிவினை யருளுஞ் சூதை இதய பூரண மதாகப்
பழகுவர் நாளும் பொய்மை பகருதல் விட்டு நீங்கார்
புழுதியலழிந்த பாதை போயுறக் காட்டுவோரே
வழிபறி கொள்ளைக் காரராகியும் விடுவர் மாதோ!

(இழிவை ஏற்படுத்தும் சூதினை பூரணமாக வாழ்க்கையில் மேற்கொள்வர், எப்போதும் பொய்யையே உரைத்துக்கொண்டிருப்பர், மாசுபடிந்த வாழ்க்கை நெறியிலே அவர்கள் சென்று கொண்டிருப்பர். மக்களின் உடமைகளை அபகரிக்கும் கொள்ளைத் தொழிலையும் செய்வர்.)

மக்கா மாநகரிலே வையந் தழைக்க மாநபியவர்கள் அவதரித்தார்கள். மாநபியவர்கள் பூமியிலே பிறந்த நிகழ்ச்சியை பல்வேறு இலக்கிய கர்த்தாக்கள், பல்வேறு கோணங்களில் நோக்கி, பல கவிதைகளைத் தந்துள்ளனர். அறியாமை இருள் படர்ந்த அகிலத்திற்கு ஒளி கொடுத்த தண்ணிலவைப்போல, பாவமெனும் வெயில்பட்டு வதங்கிப்போன மனிதப்பயிர்கள் வான்மழையைப் பெற்றது போல, பெருமானார் பிறந்தார்கள், என்று பல கவிஞர்களும், தமது சிந்தனைக் கண்கொண்டு, அச்சம்பவத்தை நோக்கினார்கள்.

இந்த வரிசையிலே இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்களிலே, இணையற்று விளங்கும் சீறாப்புராணத்தைத் தந்த உமறுப்புலவர், முகம்மது (ஸல்) அவர்களின் பிறப்பை எவ்வாறு நோக்குகிறார் என்று பார்ப்போம்.

பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர்தரு நிழல் எனலாய்
ஈனமும் கொலையும் விளைந்திடும் பவநோய்
இடர்தவிர்த்திடு மருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழையெனலாய்க்
குறைஷியின் திலகமே யெனலாய்
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபி பிறந்தனரே!

இப்பாடலிலே ஆதவனின் அளவற்ற சூட்டிலே வாடிய பயிருக்கு இதமளித்த நிழல்போலவும், இழிவும் கொலையும் மலிந்த பாவ நோயைத்தீர்க்கும் அருமருந்து போலவும், குறைஷிக்குலத்தின் திலகம் போலவும், மாநிலத்திலே ஒரு மணிவிளக்குப் போலவும் புண்ணிய நபி பிறந்தார் என்று, பல உவமையணிகளைப் பயன்படுத்தி உமறுப்புலவர் பாடுகிறார்.

உமறுப்புலவரின் இலக்கியப் பாதையிலே பயணம் செய்த மூதூர் உமறுநெய்னாப்புலவர், ஞான சூரியன் போலவும், பாவத்தை நீக்கிடும் விந்தைமிகு சஞ்சீவியைப் போலவும், கோமான் நபி இவ்வுலகிலே பிறந்தார் என்று, பல உவமையணிகளைப் பயன்படுத்தி பின்வருமாறு பாடுகிறார்.

இவ் வா றறபி நாட்டியல் பான
திருந்தது ஞாலம ஞ்ஞான
அந்தகாரத்திலே யமிழ்ந்தக்காலம்
அதிவினாரற் கதிர்களை வீசும்
சுந்தர ஞான சூரியன் போலும்
கொடும் பாவப் பிணியினுக்குரிய
விந்தையாமுயர் சஞ்சீவி போலும்
மேன்மையார் நபி புவி யுதி த்தார்.

( பொருள் :- இவ்வாறான பண்புகளே அரேபிய நாட்டின் இயல்புகளாக இருந்தன. அந்நாடு அறியாமையிலே மூழ்கிய காலத்திலேதான், அறிவுஒளியை வீசும் அழகிய தினகரன் போலும், கொடிய பாவப்பிணியைத் தீர்க்கும் விந்தைமிகு சஞ்சீவி போலும், மேன்மை மிகு முகம்மது (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்)

உமறுப்புலவருக்குப் பிறகு, தமிழ்நாட்டிலே பிறந்து தமிழிலே வண்ணங்கள், பாடுவதிலே, வல்லவராக விளங்கிய வண்ணக்களஞ்சியப் புலவர் தான் இயற்றிய இராஜநாயகம் என்ற காவியத்திலே, பல உருவக அணிகள் மூலம் பெருமானாரின் அவதாரத்தை சிறப்பிக் கின்றார். வரையில்லாது வழங்கும் வள்ளலும், வேதத்தில் புகழப்படுவரும் மறைவில்லாது ஒளிரும் பூரணசந்திரனும், துறவிகளின் தவத்தினுள்ளே விளங்கும் பழமும் ஆன மாநபி என்று, அண்ணல் நபியை, பல உருவக அணிகளைப் பயன்படுத்தி விளக்குகிறார்.

வள்ளலை ஒரு நான் மறைக்கு அரும்பொருளை
மறைபடாது இலங்கும் ஒண் மதியை
தள்ளுதற் கரு மும்மலத் தையும் கடந்தோர்
தவத்தினுள் விளங்கிய கனியை.....

மூதூர் தந்த முதுபெரும் கவிஞர் உமறுநெய்னாப் புலவரும், உருவக அணியைப் பயன்படுத்தி, வள்ளல் நபியின் பிறப்பை மணம் வீசச் செய்கின்றார். பாபமரங்கள் அடர்த்தியாகவும், செழிப்பாகவும், வைரமாகவும் அன்றைய அரேபியாவிலே ஓங்கி வளர்ந்திருந்தன. இக்காட்டினை நாயகம் அழித்தார் என்பதைப் புலவர், குபிர்க் காட்டினை வெட்டி வீழ்த்தி....' என்று உருவக அணியில் தன்கருத்தை வெளிப்படுத்தினார். பாவ உப்பு படிந்ததால், மக்களின் உள்ளம் தரிசாய்க் கிடந்தது. அதனை வளமாக மாற்றிட பெருமானார் அவர்கள் "மறை எனும் ஏரைப் பூட்டி உழுதார்." என்று இலக்கிய ஆர்வலரின் நெஞ்சம் இனித்திடும் வண்ணம், உருவக அணியைப் புலவர் பயன்படுத்தியுள்ளார். முகம்மது நபி(ஸல்) அவர்கள் மக்களின் மனதில் ஈமான் என்ற விதையைத் தூவியே இஸ்லாம் என்ற இனிய பயிரை வளர்த்தார். கவிதையின் உயிர் மட்டுமல்ல, உடலும் அழகுற்று மிளிரவேண்டும் என்பதற்கு, பல்வேறு அணிகளைப் புலவர் பயன்படுத் தியுள்ளார். பின்வரும் கவிதை உருவக அணியைப் பயன்படுத்துவதில், கவிஞருக்கிருந்த ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

கதியருள் கலிமாக் கருவுறக் குபிரின்
காட்டினை வெட்டியீழ்த் தெடுத்துப்
புதிய வன ருளும் மறையெனு மேரைப்
பூட்டியே யுழுது நல்லீமான்

விதையினைத் தூவிப் பயிரிஸ்லாத்தை
மேதினி யெங்கும் பரப்ப
தூதரா மெங்கட் கருட் கொடையாகத்
துரை நபி தரைத்தல முதித்தார்.

(பொருள் :- மீட்சியைப் தருகின்ற கலிமா நிலைபெற, அறியாமை என்ற காட்டை வெட்டி அழித்து, இறைவன் அருளிய, வேதம் என்ற ஏரைக் கொண்டு (மக்களின் உள்ளங்களை) உழுது, இஸ்லாம் என்ற பயிர் உலகமெல்லாம் செழித்து வளர்த்திட, அகிலத்தின் அருட்கொடையாக அண்ணலார் அவர்கள், மக்கா என்னும் தலத்திலே பிறந்தார்கள்)

# இஸ்லாமியக் குறள்

வள்ளுவர் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய பல அம்சங்களை ஈரடிவெண்பாவில் கூறியது போல, மூதூர் உமறு நெய்னாப்புலவரும், ஈரடி வெண்பாவிலே பல இஸ்லாமியக் குறள்களைத் தந்துள்ளார்.

இன்று கல்வியைக் கற்றவர்கள், வாழ்க்கையில் அதனைப் பயன்படுத்தாது, நெறிதவறி வாழ்கிறார்கள். இன்றைய உலகிலே படித்தவர்கள், நேர்மையில்லாப் பண்புகளுக்கு சொந்தக்காரர்களாக மாறி, புனித இப்பூமியை, பாவங்கள் மலிந்த பாலைவனமாக்க முயல்கின்றனர். இத்தகைய ஈனப்பண்புகள் கொண்டவர்களை திருத்துவதற்காக, கவிதைப் புஷ்பங்கள மலர்வித்தவர்களுள், முகம்மது சாலிஹ் என்ற இயற் பெயரையுடைய புரட்சிக்கமாலும் ஒருவர். அவர் மலர்வித்த கவிதைப் புஷ்பங்களுள் ஒன்றுதான் “ஓ! விஸ்வாசமிக்க வனே!” என்ற தலைப்பைக் கொண்ட பின்வரும் கவிதை.

மழைக்காளான் தலைவர்கள் ! தேர்தல்
மாரிக்குக் குரல்கிழிக்கும் தலைவர்கள் - அன்னார்
அழைக்க காத விருந்துண்டு சகிப் போர்!
அற்பர்கள், இஸ்லாத்தை ஏதுவென்று கண்டார்?
உழைக்காத பெருச்சாளி வர்க்கம்
ஊர் சுரண்டிக் கொழுக்கின்ற ஊதாரிக் கூட்டம்
முளைக்காத சாக்கடை என்றா சொர்க்கம்
முளைக்கின்ற இஸ்லாத்தை மூடர்கள் கண்டார்?

தற்கால அரசியலின் அவலத்தை, இக் கவிதை அழகாகச் சித்தரிக்கிறது. தேர்தல் காலத்தில் மட்டும் தரிசனம் கொடுக்கும் தலைவர்களை - வரம் கொடுக்கும் முனிவர்கள், உழைக்காத பெருச்சாளிகள் என்று கவிஞர்கள் சாடுவது முற்றிலும் பொருத்தமானது.

கல்வி கற்று அதன்படி மனிதன் வாழ வேண்டும் என்று வள்ளுவர் பின்வரும் குறளிலே கூறுகிறார்.

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக.

வள்ளுவர் வகுத்த பாதையிலே பல வெண்பாக்களை இயற்றிய மூதூர் உமறு நெய்னாப்புலவரும், நாம் முத்திப் பேற்றினை அடையவேண்டுமானால் நாம் கற்றபடி வாழவேண்டும் என்று பின்வருமாறு கூறுகிறார்.

கற்றதனா லென்ன பயன் கற்றபடி நடந்து
பெற்றுக் கொள் முத்தி தரும் பேறு

(பொருள் :- கல்வியை கற்றால் மட்டும் போதாது. ஈடேற்றப் பயனைப் பெற கற்றபடி உன் வாழ்க்கையை அமைத்துக்கொள்)

பிழை விடுபவன் மனிதன். செய்த பிழையை ஏற்றுக்கொள்ள மறுப்பவனே மனிதமிருகம். நாம் எப்போது செய்த பிழையை மனமாற உணர்ந்து, அதற்காக நெஞ்சுருக மன்னிப்புக் கேட்கின்றோமோ அப்போது நாம் மன்னிக்கப்படும் தகுதியைப் பெற்று விடுகிறோம். நாம் இந்த மண்ணில் புரியும் குற்றங்களை மன்னிக்கும் அருட் கொடையாளனாக இறைவன் விளங்குகிறான்.

தவறிழைத்தவன் மனமிரங்கி தனது தவறுக்காக வருந்தும் காட்சிகள் பலவற்றை, தமிழ் இலக்கியங்களில் நாம் கண்டு இன்புறுகின்றோம். காட்டிலே இராமனும் சீதையும் வாசம் செய்கிறார்கள். அவர்களுக்கு பக்கத் துணையாக தம்பி இலக்குமணன் இருக்கின்றான். தாய் செய்த பாவத்திற்கு பரிகாரம் கண்டிட - இராமனை மீண்டும் நாட்டிற்கு அழைத்துச் செல்லபரதன் சேனையோடு காட்டிற்கு வருகின்றான்.

பரதனின் பெரும் படையை இலக்குமணன் காண்கின்றான். பரதனின் நல்லெண்ணத்தைப் புரியாது, அவன் கடுஞ்சினம் கொள்கின்றான். அவனது சீற்றத்தைக் கூறவந்த ஆசிரியர் "....தழங்கு சீற்றத்தான்" என்று குறிப்பிடுகிறார். சினமடைந்து மட்டுமல்ல, பரதனோடு போரிடவும் அவன் ஆயத்தமானான் என்பதை .... "கவசம் பூட்டு அமைத்தனன்..." என்று கவியரசர் குறிப்பிடுகிறார்.

இறுதியில் இலக்குமணன் உண்மையை உணர்கின்றான். "அண்ணன் மீது மாசற்ற அன்புடைய பரதன் மீது, நான் வெஞ்சினம் கொண்டுவிட்டேனே!" வலிய தோளுடைய பரதனை நிந்தித்து, பல சுடு சொற்களைக் கூறிவிட்டேனே!

''அந்தத் தூயவனைப் பாவியென்றெண்ணி, அவனது ஆவியைப் போக்கிட முனைந்திட்டேனே!'' என்று அவன் உள்ளம் உருகி கண்ணீர் வடித்தான். அவன் புனைந்த வில்லும், கண்களிலிருந்து கண்ணீரும் கீழே விழுந்தன. இதனைக் கம்பர்,

எல் ஒடுங்கிய முகத்து இளவல் நின்றனன்
மல் ஒடுங்கிய புயத்தவனை வைது எழும்
சொல் லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணின் நீர் நிலத்து வீழவே - என்று கூறுகிறார்

மனிதன் தன் பிழையை உணர்ந்து, உள்ளம் உருக மறையவனிடம் மன்றாட வேண்டும். அடியார்களின் பிழையைப் பொறுப்பதிலும், அவர்களை ஆட்கொண்டு அருள் பாலிப்பதிலும் மேலானவன் இறைவன் என்பது, மூதூர் உமறுநெய்னாப் புலவரின் நம்பிக்கை. அந்த நம்பிக்கை பின்வரும் குறட்பாவில் பொதிந்துள்ளது.

உளமுருகிச் செய்தபிழை யோதும் அடியவரின்
பிழை பொறுக்கும் மேலவனைப் பேண்

(பொருள் :- உள்ளம் உருகி, தான் செய்த பாவத்தை மன்னிக்குமாறு, கேட்கின்ற அடியார்களின் பிழை பொறுக்கின்ற இறைவனை வழிபடுங்கள்)

நிலையற்ற இவ்வுலகம் நிலையானது என நம்பும் மடமை மனிதருக்கு இருப்பதால்தான், பல துன்பங்கள் தொடர்கதை போல் தொடர்கின்றன. வாழ்வும், உறவும் நிலையற்றன, என்ற உண்மையை உணர்பவர்கள், ஒருவன் மரணித்து மண்ணில் சாய்ந்துவிட்டால், கதறியழுது கண்ணீர் வடிப்பதில்லை. நம்மோடு இருக்கின்ற செல்வம் நிரந்தரமற்றது, என்பதை ஏற்றுக்கொள்பவர்கள், அது அழியும் போது, கண்கலங்கி நலிவதில்லை.

இதனால்தான் வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்று திருஞானசம்பந்தர் கூறினார் "நேற்று இருந்த மனிதன் இன்று இல்லை. என்ற புகழைக் கொண்டதுதான் இந்தப்பூமி" என்று வள்ளுவர் கூறினார். ''கல்வி கரையில....... கற்பவர் நாட் சில....'' என்று நாலடியாரும் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைக் குறிப்பிடுகிறது.

'இசைக்கோ' என்று புகழப்படும் என்.எம்.நூர்தீன் அவர்களது பாடல்கள், வாழ்க்கையின் பல தத்துவங்களை எமது நெஞ்சங்களில் பதிய வைக்கின்றன. நிலையற்ற வாழ்க்கையிலே, எண்ணற்ற மக்கள், அதன் நிலையாமையை உணராது இன்னலுறுகின்றனர். மிகக் குறுகிய வாழ்க்கையை நாம் விளையாட்டாகக் கருதி, இன்னலடைகின்றோம். மறுமைக்கான நன்மைகளைத் திரட்டாது. நாம் சிறப்பாகச் செயல்படாது – வீணாக நாட்களைக் கழிக்கின்றோம். இறை சிந்தனை எம்மை விட்டு அகன்றுவிட்டால், வாழ்க்கையானது இழிவானதாக மாறிவிடும் என்ற கருத்துக்களை, பாடலாக யாத்த கவிக்கோ அவர்கள் அதை 1968ல் அதை வானொலியில் பாடியும் காட்டினார்.

நிலையற்ற வாழ்வில் போராட்டமே - இதனை
நினையாத மாதர் பெருங்கூட்டமே
விளையாட்டில் நாளை வீணாக்கியே
விதியென்று கூறும் பல கோடியே
சிலை போல நாளும் செயலின்றியே – வீணே
சிந்தை சிதைந்தால் இழிவைக் காணுமே.
கதை பேசும் நேரம் தனை நீக்கியே
கடைத்தேறுவோம் நம் மனம் மாற்றியே
கனாப் போன்ற வாழ்வை நினைவாக்கியே பாரில்
காண்போம் எந்நாளும் புதிய பாதையே.

இது போல மூதூர் உமறுநெய்னாப் புலவரும் வாழ்க்கையின் நிலையாமை பற்றி, பின்வருமாறு குறளமுது படைக்கின்றார்.

வாழ்வு சில காலம் மரணம் வருவதற்குள்
தாழ்ந்து வணங்கித் தரி

(பொருள் :- புவி வாழ்வானது மிகவும் சுருங்கியது. அவ்வாறான வாழ்க்கை அஸ்தமிப்பதற்குமுன் இறைவனை வணங்கிக் கொள்ளுங்கள்.)

இறைவனைத் தொழாதவர்கள் எரிநரகம் சென்றிடுவர், என்பது, எல்லாச் சமயங்களும் முன்வைக்கும் ஒரு கருத்தாகும். இறைவனுக்குத் தலைசாய்க்காத மன்னர்களும், மதிவாணர்களும் இறுதியில் செல்லுமிடம் எரிநகரமாகவே இருக்கும். எனவே எரிநரகம் எம்மைத்

தீண்டாதிருக்க – சுகம் தரும் சுவர்க்கத்துத் தென்றல் எம்மேனியைத் தழுவிச் சென்றிட – நாம் உடலாலும், உள்ளத்தாலும் இறையோனை வணங்கிட வேண்டும்.

இஸ்லாமிய இலக்கியங்கள் இறைவனை வணங்காதவர்கள் எரிநரகில் வீழ்வர் என்பதனை, வலியுறுத்துகின்றன. அந்த வரிசையில் அன்னைத் தமிழை பாமாலைகளால் அலங்கரித்த, இ.மீராலெப்பை ஆலிம் அவர்கள் இறைவனைத் தொழுதிடாதவர் நரகவாதியே என்று கூறுகிறார். அவரது இக்கருத்து ''ஞானரை வென்றான்,'' என்ற நூலிலுள்ள, பின்வரும் கவிதையில் இடம் பெறுகின்றது.

கற்றதைக் கவலிடார் காசினிக் குள்ளோர்
உற்றதை உனரத்திடார் உள்ளறிந்த பேர்
பெற்றதைப் பிரித்திடார் பெரிய மானிடர்
நற்றவந் தொழுதிடார் நரகவாதியே.

மேலும் இ.மீராலெப்பை ஆலிம் அவர்கள், மழைக் காவியத்தையும் பாடினார். மழையில்லாமல் பயிர்கள் வாடியபோது, ஒரு வயலில் நின்று கொண்டு இவர் இக் காவியத்தைப் பாடினார் என்றும், இதனைப் பாடி முடிக்கு முன்பு பெருமழை பெய்தது என்றும் கூறப்படுகிறது.

மருதமுனையில் பிறந்த இவர், சீனக்குடாவில் புகையிரத நிலையத்துக்கு அருகில் அடங்கப்பட்டார். இவரது அடக்கஸ்தலத்தைச் சகல மதத்தவரும் கௌரவிப்பதோடு, அரசாங்கமும் அதனைப் பராமரிக்கின்றது.

இறைவனை வணங்காதவர்கள் எரிநகரில் வீழ்வர் என்ற கருத்தை, மூதூர் உமறுநெய்னாப் புலவர் தனது இஸ்லாமிய குறட்பாவிலே பாடியுள்ளார். விரிந்த கருத்துக்களை இரண்டு அடிக்குள் அடக்கி, சுவை ததும்பத் தருவதில், மூதூர் உமறு நெய்னாப் புலவர் நனிசிறந்தவர். இறைவனை வணங்காதவர்கள், எரிநரகில் வீழ்வர் என்பதை உமறு நெய்னாப் புலவர் பின்வரும் ஈரடி வெண்பாவில் அற்புதமாகத் தருகிறார்.

எரி நரகில் வீழ்வார் எனை வணங்கார் என்பதால்
உரிய முறை தேர்ந்தே உணர்.

(பொருள் :- இறைவனை (என்னை) வணங்காதவர்கள் எரிகின்ற நெருப்பில் வீழ்வார்கள் என்பதால் உரிய முறையில் அவனை (என்னை) வணங்குவது உன் கடன் என்பதை உணர்ந்து கொள்.)

பூமியைப் படைத்து, அதிலே பலகோடி சீவராசிகளையும் படைத்து, அவற்றைப் பரிபாலித்துப் பாதுகாப்பவன் இறைவன். படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனும் அதே வல்ல நாயனே! மனித வாழ்வை வளப்படுத்திய இறைவனுக்கு நன்றியாக, நாம் எதைச் செய்தாலும், அது ஈடாகமாட்டாது.

அத்தனை சீவராசிகளையும் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனின் சிறப்புக்களை பல பக்தி இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சைவ சமயப் பெரியாராகிய குமரகுருபரர், இந்த வையகத்தைப் படைத்துப்பரிபாலிக்கும் இறைவனைப் புகழ்ந்து பின்வருமாறு பாடுகிறார்.

"முழு ஞானப் பெருக்கே!
மும்முதற்கும் வித்தே!
பிறவிப் பிணிக்கோர் மருந்தே!"

இறைவனின் அருட்டிறனையும், தோற்றப் பொலிவையும் தண்டமிழிலே தமிழ்ப்புலவர்கள் பாடியது போல, இஸ்லாமியப் புலவர்களும் பாடியுள்ளனர். அவ்விலக்கியங்கள் இஸ்லாமியரது உள்ளங்களில் பக்தி என்னும் ஒளி கொழுந்துவிட்டு எரிவதற்குரிய காரணிகளாக அமைகின்றன. இந்த வகையில் இறைவனின் சிறப்புக்களைப் பாடியவர்களுள், அக்கரைப்பற்று அ.லெ.உமர் லெப்பை ஆலிம் முக்கியமானவர். எண்ணற்ற பாவங்களைச் செய்த மக்களும், உள்ளம் உருகி மன்னிப்புக் கேட்கின்றபோது அவற்றை மன்னித்து அவர்களுக்கு ஈடேற்றத்தைத் தருபவன் கருணைக் கடலான இறைவன், என்ற கருத்தை, அவர் பின்வரும் செய்யுளினூடாக வெளிப்படுத்துகிறார்.

ஆதியே ! உன்னை அன்பாக வாழ்த்துகிறேன்
சோதியே ! துதி யாவுக்கும் பாத்திபா
நீதியே! யனு வூற்றினு முன்னர
சாங்கத்தில் லனியாய மதற்றவா
ஓதியே யடியார்கள் வணங்கிலும்
உன் கிரு பைகொண் டி டேற்ற மாக்குவா
'கா திறா' ன கருணையங் கடலே
கைப்புட்பச் சிசு மாலையை யோதுவாம்.

இறைவன் புகழ்பாடி, முஸ்லிம்களின் பக்தி உணர்வு செழித்தோங்குவதற்கு, மூதூர் உமறுநெய்னாப்புலவரும், பங்காற்றியுள்ளார். அகிலத்தையும் அண்டசராசரங்களையும், அவற்றில் உள்ள கோடான கோடி சீவராசிகளையும் படைத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவனின் சிறப்புக்களை பின்வரும் ஈரடி வெண்பாவில் புலவர் அற்புதமாகத் தருகிறார்.

பொறற்பதியும் பாரும் பொருந்தும் உயிரெவையும்
உற்பவித்த நாயனை யோது

(இந்தப் பூமியையும் உலகத்தையும் அவற்றிலே வாழும் உயிர்களையும் தோற்றுவித்த நாயகனை வாழ்த்தி வணங்கு)

இவ்வுலகிலே அசையும் காற்றையும் ஓடிவரும் நதியையும், அழகொளி தரும் நிலவையும் படைத்தவன் இறைவன். மனிதன் உயிர் வாழ்வதற்காக கடலுக்கடியில் பல செல்வங்களையும், மண்ணுக்கடியில் பல தாதுக்களையும், அவன் படைத்துள்ளான். நறும்பாலைத் தரும் பசுவையும், முட்டை தந்து எமக்கு வலுவூட்டும் கோழிகளையும் உருவாக்கியவன் அவனே! மலைச்சாரலிலே கண்களுக்கு விருந்தான நீர்வீழ்ச்சிகளையும் உருவாக்கியவன் அவனே! ஆற்றங்கரை தன்னிலே, நீரரிப்பைத் தடுக்கக் கூடிய கண்டல் தாவரங்களையும் தோற்றம் பெறச் செய்தவனும் அவனே. அத்தனை படைப்புக்களையும் மனிதனுக்காகவே இறைவன் படைத்துள்ளான். இதை வலியுறுத்தத்தான் மூதூர் உமறுநெய்னாப் புலவர் "எல்லாப் படைப்பும் எமக்கென்றோ செய்தளித்த...." என்று பாடுகிறார். மேலும் அனைத்துச் சக்திகளுக்கும் மேலானவன் அவனே, அனைத்துக்கும் சக்தியை வழங்கும் மூலப்பொருளும் அவனே. 'இவ்வாறான இறை வனைப் புலவர் ஒரே வார்த்தையில், 'வல்லான்' என்று குறிப்பிடுகிறார்.

செந்தமிழ் இலக்கியங்கள் படைத்த பல தமிழ்ப்புலவர்களும், இறைவனின் வல்லமைகளாக, பல்வேறு கோணங்களிலே பார்த்து, வியந்து, நயந்து பாடியிருக்கிறார்கள். தமிழ்க்கவிதை வரலாற்றில் பல புரட்சிகளை அரங்கேற்றிய பாரதி, இறைவனை 'அருட்சுணை' என்றும் 'உயிர்ச்சுடர்' என்றும் வர்ணிக்கின்றார்.

உண்மையில் அமுதாவாய் - புண்கள்
ஒழித்திடுவாய் களி உதவிடுவாய்
வண்ணம் கொள் உயிர்ச் சுடராய் இங்கு
வளர்ந் திடு வாய் என்றும் மாய்வதில்லாய்
ஒண்மையும் ஊக்கமுந்தான் - என்றும்
ஊறிடுந்திரு வருட் சுனையாவாய்!

வாழும் வகை தெரியாது, இருட்டுலகில் வாழும் மனிதர்களுக்கு, வெளிச்சத்தைக் காட்டுவதற்காக, மூதூர் உமறு நெய்னாப் புலவர் பல இஸ்லாமியக் குறள்களை இயற்றியுள்ளார். வானத்தையும் பூமியையும் பூமியிலுள்ள அனைத்தையும் எமக்காகப் படைத்தவன் இறைவன். "கருணா மூர்த்தியான அந்த இறைவனை வணங்கிடுவாய்!" என்று மனுக்குலத்தைப் பார்த்து, மூதூர் உமறுநெய்னாப் புலவரின் பின்வரும் கவிதைவரிகள் பேசுகின்றன.

"எல்லாப் படைப்பு மெமக்கென்றோ செய்தளித்த
வல்லானை நித்தம் வணங்கு.

(பொருள் :- உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் எமக்காகப் படைத்தருளிய வல்ல இறைவனை என்றும் வணங்கிக் கொள்)

உலகிலே உன்னத படைப்பாய்ப் படைத்த, மற்ற உயிர்களிடம் இல்லாத, பல ஆற்றல்களை எமக்கு அருளிய இறைவனைப் போற்றி வாழ்வது, மண்ணில் வாழும் மனிதரது முக்கிய கடமையாகும். சிந்திக்கும் ஆற்றலை இறைவன் எமக்குத் தந்ததன் மூலம், பெருமைக்குரிய வாழ்க்கையை வாழும் பாக்கியத்தைத் தந்துள்ளான். எனவே இறைவனைத் துதிப்பதும், அவனது நினைவுகளில் மூழ்குவதும் எமது கடமைகளாகும். இஸ்லாமியர்களின் அருள்மறையாக, விளங்கும் திருக்குர்ஆனும், ''இறைவனை வணங்குவது மனிதரது கடமை'' என்று பின்வருமாறு கற்பிக்கின்றது.

வானங்களிலும் பூமியில் உள்ளவர்களும்
பட்சிகளும் (தங்கள்) இறக்கைகளை
விரித்(துப் பறந்)த வண்ணமாக நிச்சயமாக
அல்லாஹ்வை துதி செய்து கொண்டிருக்கின்றன.
என்பதை (நபியே!) நீர் காணவில்லையா?

இவையாவும் தாங்கள் துதி செய்து வணங்க
வேண்டிய முறையை நிச்சயமாக அறிந்தே
யிருக்கின்றன. அல்லாஹவும் அவைகள் சொல்
பவைகளை நன்கறிந்து கொள்கின்றான். (அல்குர் 24:14)

இக்கூற்றின்படி பூமியில் உள்ள அத்தனை சீவராசிகளும் இறைவனைத் துதித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே மனிதனும் இறைவனைத் துதிப்பது அவசியம் என்பது புலனாகின்றது.

புலவர் நாயகம் என்று புகழப்பட்டவரும், 1842 இல் சீறப்புராணத்தை அரங்கேற்றியவரும், 'சொர்க்க நீதி' என்ற இலக்கியத்தைத் தந்தவருமான அப்துல்காதிர் நெயினார் லெப்பை ஆலிம், ''இறைவனைத் தொழுவது சகல மனிதரினதும் கடமை'' என்று கூறுகிறார். ஐவேளையும் இறைவனை வணங்குவது மட்டுமல்ல, இடையிடையே சுன்னத்தான தொழுகைகளைத் தொழுவதும் நோன்பு நோற்பதும், வெள்ளி திங்கள் இரவுகளில் தஹஜ்ஜத் தொழுவதும் மனிதரின் கடமை என்று பின்வரும் செய்யுளின் மூலம் அவர் வலியுறுத்துகிறார்.

அஞ்சொ குத்தும் தப்பாமற் றொழுக வேண்டும்
அதற்கிடை யீ னபிற் றொழுகை யெடுக்க வேண்டும்
வஞ்சமறப் பெருநோன்பு பிடிக்கவேண்டும்
வரிசை பெறு வெள்ளி திங்கள் விழிக்க வேண்டும்.

வாடாத தமிழ்ப்பாமலைகள் புனைந்து வளமான மூதூரின் பெயரை இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒளிரச் செய்த, உமறு நெய்னாப்புலவரும், இறைவனின் புகழையும் அவனை வணங்குவதன் அவசியத்தையும் த்னக்கே யுரிய பாணியில் பாடுகிறார். இறைவன் அழிவில்லாதவன் என்பதை உணர்த்த 'நின்றே நிலைக்கும் நிமலன்' எனவும், நாம் படைக்கப்பட்டது வணங்குவதற்காகவே என்பதை உணர்த்த 'நமை வணங்கற் கன்றிப் படைத்தில...'' என்றும் குறிப்பிடுகிறார்.

நின்றே நிலைக்கும் நிமலன் 'நமை வணங்கற்
கன்றிப் படைத்தில னென்றறி.

(பொருள் :- என்றும் அழியாத வரம்படைத்த இறைவன், தன்னை வணங்குவதற்காக அன்றி, எம்மைப் படைக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்)

# சோபனம்

முகியித்தீன் ஆண்டகை மீது, மாறாத அன்பு செலுத்தியமையா லேயே, யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர், முஹ்யித்தீன் புராணம்' என்ற காவியத்தை இயற்றினார். இராமரது அருங்குணங்களில் கம்பரின் உள்ளம் அதிகமாக ஈடுபட்டதன் காரணமாகவே, தமிழ் இலக்கியச் சோலையிலே, 'கம்பராமாயணம்' என்ற அழகிய புஸ்பம் மலர்ந்தது. அதுபோல, 'இஸ்லாம்' என்ற பயிர், இம் மண்ணில் செழித்து வளரக் காரணமாக இருந்த, மாநபியவர்கள் மீது மூதூர் உமறு நெய்னாப் புலவர் மாறாத அன்பு கொண்டிருந்ததனால், "சோபனம்" என்ற பாமாலையைத் தொடுத்தார்.

இறைவனின் மார்க்கத்தை பூமிதனில் துலங்க வைத்த தூயவர் போதனைகள் செய்து மறவர்களை மாணிக்கங்களாக மாற்றிவைத்த மேலவர் - முகம்மது நபி (ஸல்) அவர்களைப் புகழாத இஸ்லாமிய இலக்கியங்கள் இல்லை என்று கூறுமளவிற்கு மாநபியவர்கள் சகல இஸ்லாமிய இலக்கியங்களாலும் புகழப்படுகின்றார். இலங்கையில் பிறந்த இஸ்லாமியப் புலவர்கள் பட்டியலிலே சிறப்பிடம் பெறுபவர். வாழைச்சேனை, மீரா முகைதீன் ஆலிம் அவர்கள். இவர் தனது இலக்கியப் படைப்பான உபதேசக் காவியத்தில். இவ்பூவுலகம் உருவாகக் காரணமாக இருந்த மாநபியை, முழுமையாக நாம் பின்பற்றி நடக்க வேண்டும் எனப் பின்வருமாறு உபதேசம் செய்கின்றார்.

கருவாக நபியவர்களில்லா திருந்தால்
உருவாக யிவ்வுலகி லெவ்வித முதிப்பாய்
குருவான நபி சொல்லு மாறி நடவாமல்
குணமாயவர் மார்க்க மீதினில் வணங்கே.

பெருமானார் மீது பேரன்பு கொண்ட உமறுநெய்னாப் புலவரும், பெருமானரின் ஒப்பற்ற பண்புகளை நெஞ்சினிக்கப்பாடுகிறார். மறுமை நாளிலே எமது பாவங்களை அழித்து, எம்மைச் சுவர்க்கத்தில் சேர்த்து விடுவதற்கு, வள்ளல் நபியவர்கள் இறைவனிடம் மன்றாடுவார்கள். ஏனைய நபிமார்கள் தமது உம்மத்தவர்களின் ஈடேற்றத்திற்கு மன்றாடாத வேளையிலே, பெருமானார் மட்டும் இறைவனிடம் அழுது புலம்பி, எமது ஈடேற்றத்திற்குப் பிரார்த்திப்பார்கள். அகிலத்தின் அருட்கொடை யான அண்ணல் நபியவர்களின் இந்த அருங்குணத்தில், தனது

இதயத்தைப் பறிகொடுத்த மூதூர் உமறுநெய்னாப் புலவர், பின்வருமாறு மாநபிக்கு சோபனம் கூறுகிறார்.

ஒன்றான இறைவனிடம் உவந்து எமை
மன்றாடிக் கரை சேர்க்கும் மகுமூது நபிக்கு சோபனம்.

(பொருள் :- ஒருவனான இறைவனிடம், மன விருப்பத்துடன், எமக்காக மன்றாடி, எம்மைக் கரை சேர்த்துக் காப்பாற்றும், அண்ணல் நபியை வாழ்த்துவோமாக!)

வாழும் வகையறியாது மயங்கிக் கிடந்த மக்களுக்கு, மாண்புறு வாழ்க்கையைக் காட்டியவர் மாநபி. அவர் இறைமறையை மக்களுக்குப் போதித்து மனிதவாழ்வு அருள்மணம் வீசிட வழிசெய்தார். குழந்தைகளைக் குழியினுள் புதைத்த பாதகரை புண்ணியமும், கண்ணியமும் மிக்க மக்களாக மாறிட வழிவகுத்தவர் அண்ணல் நபியவர்கள். கொலைகளும், கொள்ளைகளும் நிறைந்த நாடு என்ற பெயரைப் பெற்றிருந்த அரேபியாவை, தத்துவஞானிகளையும், அறிவியல் ஞானிகளையும் தந்த நாடு என்ற பெருமை கொள்ளுமாறு மாறிடக் காரணகர்த்தாவாக இருந்தவர், மாநபியவர்கள்.

மாநபியின் புகழைப் பாடும் இலக்கியங்களைப் படைத்தவர்களின் பட்டியலில் விடத்தல் தீவு புலவர் முகம்மது காசிம் ஆலிமும் முக்கியமானவர். "மாநபியே!" என்ற தலைப்பில் அவர் நெஞ்சங்கள் இனித்திட பாடிய பாக்கள் அனைத்தும் பக்திச் சுவை வாய்ந்தவை. புலவரின் பின்வரும் பாடல் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்் ஈனர்களை இறை நேசர்களாக மாநபியைவர்கள் மாற்றினார் என்பதை விளக்குகிறது.

குழந்தைகளைக் குழிபுதைத்து
கொலை புரிந்த கொள்ளையரை
குலந்தழுவிக் காக்க வைத்த
குபேர புரி மாநபியே!

சூதிலும், கற்பழிப்பதிலும் சூரர்களாக இருந்தவர்களுக்கு மதியுரையூட்டி, மாநிலத்தின் மாதவத்தவர்களாக மாற்றியவர் மாநபியவர்கள். இக்கருத்துக்களை புலவரின் சிந்தையிலிருந்து பாட்டாய் வெளிப்படும் போது தேனாய்த் தித்திக்கின்றது.

மாதர்களைச் சூதில் வைத்து
பாதகமாய்க் கற்பழித்து
மாதவத்தை மறந்தவர்க்கு
மதியூட்டும் மாநபியே!

இவ்வாறு மாநபியவர்களின் ஒப்பற்ற குணங்களைப் பாட்டில் அமைத்து, முகம்மது காசிம் புலவர் தமிழை வளப்படுத்தியது போல, மூதூர் உமறுநெய்னாப் புலவரும் மாநபியவர்களைப் புகழ்ந்து பல பாடல்களை இயற்றியுள்ளார். வள்ளல் நபியவர்களின் வாழ்விலும், வாக்கிலும் தனது உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர், "சோபனம் மிகு சோபனம் இறைதூது நபிக்கு சோபனம்..." என்று கூறுகிறார். 'மாநபியவர்கள் மண்ணில் பிறந்த மானிடருக்கு மட்டுமல்ல, சொர்க்கத்தில் வாழும் வரம் பெற்றவர்களுக்கும் காவலர்' என்று உமறுநெய்னாப் புலவர் பின்வருமாறு பாடுகிறார்.

சோபனம் மிகு சோபனம் இறைதூது நபிக்கு சோபனம்
காவனம் நிறைந்த சொர்க்கக் காவலர்க்குச் சோபனம்

(பொருள் :- இறைவனுடைய தூதுவராகிய முகம்மது நபி(ஸல்) அவர்களுக்கு வாழ்த்துக்கள். நறுஞ்சோலைகள் நிறைந்த சொர்க்கத்தின் தலைவரான மாநபிக்கு வாழ்த்துக்கள்)

இறைவனின் அருள்தூதராய், மண்ணின் மாசினை அகற்ற வந்த மறைபோதராய், ஈருலகிலும் வெற்றியைத் தந்த மார்க்கத்தைத் தந்த இறைநேசராய், இப்பூவுலகில் அவதரித்த பெருமானார் மீது, மாறாத அன்புடையவராக உமறு நெய்னாப் புலவர் விளங்கினார்கள்.

'பரிதியும், மதியும் படைத்த மறையவனின் நபிமார்களுள் வரிசையும், மேன்மையும் மிக்கவராக - மறைநூலாகிய குர்ஆனைக் கொணர்ந்த கோமானாக - மாநபியவர்கள் விளங்கினார்கள் என்பதை மூதூர் உமறுநெய்னாப் புலவர் பின்வரும் செய்யுளின் மூலம் எமக்குச் சிறப்பாகத் தருகிறார்.

பருதியு மதியு முடுக்குல மனைத்தும்
படைத்திரு கருணை நாயகனின்
திருவருள் பெருகுந் தூதென வுலகில்
செனித்திடு நபிகளான வரில்
வரிசையும் பேறும் மிகவுடையவராய்

மறை புறுக்கானதைக் கொணர்ந்த
குரு நபி நயினார் முகம்மதெங் கோமான்....

அருள் மறைந்து மருள் நிறைந்து, நலம் ஒழிந்து, இருள் சூழ்ந்திருந்த காலப்பகுதியில்தான், சத்தியத்தின் பேரொளியாக - சமாதான ஒளியை நாற்றிசையும் ஏற்றிவைத்த தீபமாக - வள்ளல் நபியவர்கள் இம் மண்ணில் அவதரித்தார்கள்.

அண்ணலாரின் இளமைக் காலத்திலே, சூதும் வாதும், பொய்யும் களவும், மதுவும் விபச்சாரமும் அக்காலச்சமூகத்தை அரித்துக்கொண்டிருந்தன. சிறுவராக இருந்த அண்ணல் நபியவர்கள், சமூகம் மாறிட வேண்டும் என்பதற்காக, தினமும் ஹிராமலைக்குச் சென்று, இறைவனைப் பிரார்த்திப்பார்கள். ஒரு முறை மாநபியவர்கள், ஹிராமலைக்குகையில், தியானத்தில் இருக்கும் போது, திடீரென்று ஒரு ஒளிப்பிளம்பு தோன்றி, அப்பிரதேசம் முழுவதையும் சோதிமயமாக்கியது. அங்கு தோன்றிய வானவர் தலைவர், ஜிப்ரீல் (அலை) அவர்கள், முகம்மது (ஸல்) அவர்களைப் பார்த்து, 'ஓதுவீராக' என்று கூறினார்கள். அதற்கு மாநபியவர்கள் 'எனக்கு ஓதத்தெரியாதே!' என்று பதில் கூறினார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'ஓதுவீராக.....! ஓதுவீராக.....! உம்முடைய இறைவனின் திருப் பெயரைக் கொண்டு ஓதுவீராக...." என்று கூறி, குர்ஆனின் முதல் வசனத்தை, ஓதிக்காட்டினார்கள். இச் சம்பவம் உலகவரலாற்றின் போக்கையே மாற்றியமைத்தது. அதனை மூதூர் உமறுநெய்னாப் புலவர், பின்வருமாறு அழகு தமிழில் தருகிறார்.

வானவர்க்கரசர் வந்து மார்புறத் தழுவிய
கோனபிக்குச் சோபனம் தர்ம தொண்டலார்க்குச் சோபனம்

(பொருள் :- வானவர் தலைவரான ஜிப்ரீல் (அலை) அவர்களால், மார்புறத் தழுவப்பட்ட முகம்மது (ஸல்) அவர்களுக்கு வாழ்த்துக்கள் கொடை வள்ளலும், மக்கள் சேவகருமாகிய முகம்மது (ஸல்) அவர்களுக்கு வாழ்த்துக்கள்)

இவ்வுலகிலே அன்பும் அகிம்சையும் நீடித்து நிலைத்திட பண்பாறுகள் பாய்ந்து உள்ளங்களை செழுமை செய்திட - பூமியிலே காலத்திற்குக் காலம் புண்ணிய மூர்த்திகள் தோன்றியுள்ளனர். மனித குல மாணிக்கங்களாக அவதரித்த, அம்மனிதர்கள், அஞ்ஞான இருளகற்றப்பாடுபட்டார்கள்.

மண்ணின் மைந்தர்களாய் - பாவத்தால் உலகம் அழிந்திடாது அதனைப் பாதுகாக்க வந்த சான்றோர்களாய் - உதித்த அந்த மேலோரைப் பற்றி, பல இலக்கியங்களும் ஏற்றிப் புகழ்கின்றன. தனக்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய வாழ்க்கையை வாழ்பவனைத்தான், இந்த உலகம் ஏற்றிப்புகழும் என்று, வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

தமிழில் அறநூல்கள் எழுந்ததுபோல, வேறு எந்த மொழியிலும், பெருந்தொகையாக எழவில்லை. தமிழில் அறநூல்கள் வளமான இலக்கியங்களாக நோக்கப்படுவதைப் போல, வேறு எந்த மொழியிலும் நோக்கப்படுவதில்லை. சங்கமருவிய காலத்தில் அதிகமான அறநூல் கள் எழுந்து, தமிழ் அன்னையை அழகுதேவதையாக ஆக்குகின்றன. சங்கமருவிய காலத்தில் தோன்றி, புண்ணிய பாதையிலே மக்கள் நடைபயில வழிவகுத்த அறநூல்களுள் ஒன்றாக, ஏலாதி அமைகின்றது. "மற்றார் செய்யும் கொலையை விரும்பாதவனும் தன் கையால் எந்த உயிரைக் கொல்லாதவனும் ஊனை உண்ணாதவனும், பிறரை வருத்தும் தொழிலைச் செய்யாதவனும், பொய்யை ஒரு நாளும் சொல்லாதவனும், தனது நிலையிலிருந்து மாறுபடாதவனும் ஆகிய மேலோன் மண்ணகத்தில் மட்டுமல்ல, விண்ணகத்திலும் தலைவனாக அமைவான்" என்று ஏலாதி பின்வருமாறு கூறுகிறது.

கொலை புரியான் கொல்லான் புலால் மயங்கான் கூர்த்த
அலை புரியான் வஞ்சியான் யாதும் நிலை திரியான்
மண்ணவர்க்கும் அன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

வையகத்தை வாழ்விக்க - பாசநிலா எங்கும் பவனிவர - காரணமாக இருந்தவர், முகம்மது (ஸல்) அவர்கள். மக்காவிலே பிறந்து, மதீனாவிலே தீன் கொடியை ஏற்றி, சுவர்க்கத்தைப் பரிசாக, அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இதனை மூதூர் உமறுநெய்னாப் புலவர் மக்க நபி.... மதின நபி.... சொர்க்க நபி... என்று கூறி, இலக்கியச் சுவை மயக்கத்தில் எம்மை ஆழ்த்திவிடுகின்றார்.

மக்க நபிக்குச் சோபனம் மதீன நபிக்குச் சோபனம்
சொர்க்க நபிக்குச் சோபனம் எங்கள் துரை நபிக்குச் சோபனம்

(பொருள் :- மக்காவிலே அவதரித்த நபிக்கு வாழ்த்துக்கள். மதீனாவிலே வாழ்ந்த நபிக்கு வாழ்த்துக்கள். எங்கள் தலைவரான முகம்மது (ஸல்) அவர்களுக்கு வாழ்த்துக்கள்)

முகம்மது நபியவர்கள், நபிமார்களுள் இறுதி நபியாக இம்மண்ணில் அவதரித்தார்கள். ஆனால் சோபனம் என்ற தலைப்பில் பாடல்கள் செய்த மூதூர் உமறுநெய்னாப் புலவர் அவர்கள் "ஆதிநபிக்குச் சோபனம்..." தொடங்கும் ஒரு செய்யுளைப் பாடியுள்ளார்.

பெருமானாரின் பெருமைகளைப் புலவர் நன்கு அறிந்ததனா லேயே ஆதி நபி என்று முகம்மது (ஸல்) அவர்களைக் குறிப்பிட்டார். நபிமார்களில் வரிசைகளில் முதன்மையானவர் மட்டுமல்ல, ஆதம் நபி முதல் அத்தனை நபிமார்களையும், இந்த உலகத்தையும் படைப்பதற்கு முகம்மது (ஸல்) அவர்களே, காரணமாக விளங்கினார்.

"நான் முகம்மது(ஸல்) அவர்களைப் படைத்திருக்காவிட்டால், இந்த உலகத்தையே படைத்திருக்கமாட்டேன்." என்று இறைவன் கூறுகின்றான்.

இதனாலேயே முகம்மது நபியை, ஆதி நபி என்று உமறு நெய்னாப் புலவர் அழகாக் குறிப்பிடுகின்றார். இவரைப்போல இஸ்லாமிய நெறிமுறையில் பாக்களை இயற்றிய பல புலவர்களும், முகம்மது நபியை ஆதி நபி என்றே குறிப்பிடுகின்றனர். கிண்ணியாவில் வாழ்ந்து அடங்கிய, செய்யது மஹ்மூது என்பவரின் சிரேஷ்ட புதல்வர், அப்துல்ஸமது ஆலிம் சாஹிபு ஆவார். ஓலுவிலில் வாழ்ந்த இவர் 'மரணரெத்தின மாலை' 'ஞான ஒப்பாரி' முதலிய இலக்கியங்களை இயற்றினார். இவரும் தனது கவிதையில் மாநபியவர்களை ஆதிமுகம்மது என்றே குறிப்பிடுகிறார்.

ஆதி முகம்மது நபியைப் போற்றி
அழகாம் அசுஹாபிமாரைப் போற்றி
நீதமுறு நபி மலரைப் போற்றி

நிலத்தில் வாழொலி மாரைப் போற்றி
சோதி தூதரின் பேரராக
துலங்கும் ஹஸன் ஹுசைன் தம்மைப் போற்றி
வேத உலமாக்கள் தம்மைப் போற்றி
விளங்கும் பாடலைத் தொடங்கினேனே'

இஸ்லாம் காட்டிய இனிய பாதையிலே வாழ்ந்த மூதூர் உமறுநெய்னாப் புலவர் பெருமாரை ஆதிநபி என்றும், அகமது நபி என்றும் கூறி அகமகிழ்கின்றார். தன்னைப் போல பிற உயிர்களையும் நேசிப்பதே மாபெரிய தவம். அவ்வாறான தவத்திலே சிறந்தவர் என்பதனாலேயே பெருமானாரை மாதவத்திற்குரிய எமது வள்ளல் நபி என்று புலவர் புகழ்ந்துரைக்கின்றார்.

ஆதி நபிக்குச் சோபனம் அகமதார்க்குச் சோபனம்
மாதவத்தையுடைய எங்கள் வள்ளலார்க்குச் சோபனம்

( பொருள் :- ஆதிநபி என்றும் அகமது நபி என்றும் பெயரையுடைய முகம்மது (ஸல்) அவர்களுக்கு வாழ்த்துக்கள். மிகப் பெரிய தவத்தைச் செய்யும் எமது வள்ளல் நபிக்கு வாழ்த்துக்கள்)

# நபிமொழிகள் வெண்பா

கல்வியானது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு மிகவும் அவசியமாகும். அறிவுக் கண் இல்லாதவன் கண்ணிருந்தும் குருடனா வான். கல்வி எந்த இடத்தில் இருந்தாலும் - என்ன விலை கொடுத்தாலும் அதனை அடைந்திட வேண்டும். கல்வியை வலியுறுத் துவதாகவே இறைமறையின் முதல் வசனமும் அமைகின்றது. (ஓதுவீ ராக!) “எனக்கு ஒரு எழுத்தையேனும் கற்பித்துத்தரும் ஒருவருக்கு நான் வாழ்க்கை முழுவதும் அடிமை” என்று அலி(ரழி) அவரக்ள் நவின்றுள்ளார்கள். இத்தகைய சிறப்புடைய கல்வியை எவ்வளவு சிரமங் களை எதிர்கொண்டாயினும் கற்கவேண்டும் என்ற நோக்கில் “சீனா சென்றேனும் சீர்கல்வியை நாடு” என்று அண்ணலார் செப்பினார்கள்.

கல்வி பற்றி நபியவர்கள் கூறிய இக்கருத்தை, புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களும், மூதூர் உமறுநெய்னாப்புலவரும் வெவ்வேறு கோணங்களில் நோக்கியுள்ளனர். பெண்கள் உட்பட அனைவருக்கும் கல்வி கற்பது கடமை. சீன நாடு சென்றேனும் ஞான ஒளியாகிய கல்வியைக் கற்பது, அவசியம் என்ற கருத்தை பின்வரும் பாடல்வரிகள் மூலம் புலவர்மணி தருகிறார்.

கல்விதனை யொருவன் கற்றல் கடனாகும்.
மெல்லிய லார்க்கு மதுவிதியே -கல்விதனைச்
சீனவளநாடு சென்றேனுங் கண்டடைய
வேணும் மதிக்கோர் விளக்கு.

கல்வியை மூதூர் உமறுநெய்னாப் புலவர் ‘ஞானத்தைத் தரும் கலை’ என்று கூறுகிறார். புலவரும் மாநபி மீது மடடில்லா வாஞ்சை இருப்பதனால் மன்றல் நபி என்று கூறுகிறார். “சீனா சென்றேனும் ஞானம் தேடு” என்ற நபி மொழியை, புலவர் நெஞ்சமெல்லாம் இனிக்கும் வண்ணம் பின்வருமாறு கூறுகிறார்.

ஞானந்தருங் கலையை நாடாதிருந்தக்கால்
ஈனந்தரு மடமை எய்துவிக்கும் - சீனத்தில்
சென்றேனுங் கல்வியைத் தேடனல மென்றன்றே
மன்றல் நபி சொன்னார் மதித்து.

(பொருள்:- அறிவைத்தரும் கலையாகிய கல்வியை நாடா விட்டால் நாசத்தைத் தரும் மடமை ஏற்படும்; ஆதலால் சீனாவுக்குச் சென்றாயினும் கல்வியைத் தேடுவது அவசியம் என்று வாசனை பொருந்திய நபியவர்கள் சொன்னார்கள்).

இவ்வுலகிலே அன்பின் மொத்த உருவமாக - பண்பின் இருப்பிடமாக - அன்னை திகழ்கின்றாள். அன்னையின் அன்புக்கு நிகராக, பூமியில் நாம் எதனையும் கூறுமுடியாது. பத்துமாதம் சுமந்திருந்து, பகலிரவாய்க் கண்விழித்து எம்மை வாழ்வித்தவள் எம் தாய். எம் கண்ணில் நீர்வடிந்தால் அவளின் நெஞ்சில் உதிரம் கொட்டும். எமது நலனில் அதிக அக்கறை கொண்டவள் அவள். தாயின் அன்பைப் பெறுவதிலேயே பிள்ளைகளுக்கு ஈடேற்றம் உள்ளது. இதனால்தான், அருள்நாதரும், மறைபோதரும், நபிநாதருமான முகம்மது (ஸல்) அவர்கள், “அன்னையின் பாதத்தின் கீழ்தான் மைந்தனின் சுவர்க்கம் உண்டு” என்று நவின்றார்கள். இதிலிருந்து பிள்ளைகளின் முன்னேற்றம் அன்னையின் அன்பிலும் ஆசீர்வாதத்திலுமே உள்ளது என்பது புலனா கின்றது. தாயிற் சிறந்த கோயிலுமில்லை..” என்று சான்றோர்களும் அன்னையின் பெருமையைக் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

தமிழ் மொழியின் இனிமையை உலகத்திற்கு எடுத்துக்காட்டிய கம்பராமாயணம் என்ற காவியத்தில், தாயின் பெருமை பல இடங்களிலும் சிறப்பிக்கப்படுகின்றது. தன்னை நாடி வந்த தாயாரின் திருப்பாதங்களிலே, இராமன் விழுந்து வணங்கும் காட்சிதனை கவியரசர் கம்பர் பின்வருமாறு வருணிக்கின்றார்.

எந்தை யாண்டை யான் இயம்புவீர்? எனா
வந்த நாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணநீர்
முந்தை நான் முகத்தவற்கும் முந்தையான்.

இன்றைய மனிதன் அன்னையின் பெருமையை மறந்து, நெறிபிறழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். தீப்போலும் வார்த்தை யினால் அன்னையின் உள்ளத்தைச் சுடுகிறான். முதுமையடைந்த அன்னை, தனது இன்பவாழ்வுக்குத் தடை என்று கருதுகின்றான். இன்று மலிந்துள்ள ‘முதியோர் இல்லங்கள்’ மனிதரின் மனங்கள் மாசடைந் ததைக் காட்டும் குறிகாட்டிகளாக உள்ளன. இவ்வாறான

பண்புகளைக் கொண்ட மனிதர்களைப் பார்த்துத்தான், 'அன்னையைப் பேண்!' என்று மூதூர் உமறுநெய்னாப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்.

பத்து மாதம் பாரச் சுமையாக
வைத்தெடுத்துப் பெற்ற மகவலவோ - எத்தனையோ
இன்னலைடைந்திருப்பாளீதறிவை யாமாகில்
பின்னையேன் அன்னையினைப் பேண்!

(பொருள் :- தாய் தனது குழந்தையைப் பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கின்றாள். அக்குழந்தையை வளர்த்தெடுப்பதற்காக எண்ணில டங்கா இன்னல்களை அவள் அனுபவித்திருப்பாள். இதை அறிந்து பிள்ளைகள் தமது அன்னையைப் போற்றித் துதிக்கவேண்டும்)

நாம் சிறு குழந்தைகளாக இருக்கும் போது, எமது உடல் நலத்தைக் காத்திட எம் உளநலத்தைப் பேணிட - எமது தந்தை அரும்பாடு பட்டுள்ளார். எமக்குத் தேவையான நலமான உணவுகளை யும், ஆடை அணிகலன்களையும், விளையாட்டுப் பொருட்களை யும் அவர் எமக்கு ஈந்து, எம்மை மகிழ்வித்துள்ளார். நாம் மகிழ்வாக இருக்க, பல துன்பங்களை எதிர்கொண்ட மேலானவர் எம் தந்தை பிள்ளைகளின் நலனுக்காக, தம் நலத்தை அர்ப்பணிக்க தந்தைமார் தயங்குவதில்லை.

தமது பிள்ளைகளுக்கு உணவும் உடையும் வழங்க வேண்டும் என்பதற்காக, தந்தைமார் கடினமான தொழிலையும் ஆற்றுகின்றனர். அலைகள் நிறைந்த கடலிலே உயிரைப் பணயம் வைத்து, சிலர் பொருள் தேடுவர். காட்டை வெட்டி, மண்ணைப் பதமாக்கி, விவசாயம் செய்து பிள்ளைகளுக்கு பொருள் சேர்ப்பர் சிலர். கையில் இரத்தம் வழிய, கல்லுடைத்து தம்பிள்ளைகளின் பசியைத் தீர்க்க முயல்வர் வேறு சிலர். இவ்வாறு பிள்ளைகளின் நலத்திற்காக தந்தைமார் படும் பாட்டை..." "பஞ்சுபடும் பாடு பட்டலைந்து.." என்று ஓர் உவமை நயத்தோடு, உமறுநெய்னாப் புலவர் விளக்குவது, இலக்கிய நெஞ்சங்களுக்குத் தேனாக இனிக்கின்றது. சுழன்றடிக்கும் கடுங்காற்றில் பஞ்சு என்ன பாடுபடுமோ, அது போல பாடுபட்டே ஒரு தந்தை பொருள் சேர்க்கின்றார். மேலும் அறிவுடையவர்களாக எம்மை மாற்ற அவர், நிதமும் பாடுபட்டுள்ளார் என்றும் புலவர் கூறுகின்றார்.

சங்ககாலப்புலவர் இளம்பெருவழுதி, தம் நலம் பராது, பிறர் நலத்தை நோக்குபவர்களால்தான், இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது என்று பின்வருமாறு கூறுகிறார்.

தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந் ருண்மை யானே
......(உண்டாலம்ம விவ் வுலக).... என்று கூறுகிறார். மூதூர் உமறுநெய்னாப் புலவரும், 'பிள்ளைகளுக்காக பன்னரிய பாடுகளை சுமந்த தந்தையரை உள்ளத்திலே என்றும் நினை' என்று, பின்வரும் பாடல் வரிகள் மூலம் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.

கொஞ்சுங் குளவி யுனக்கோர் குறையும் வாராது
பஞ்சுபடும் பாடுபட்டலைந்து - நெஞ்ச மிக
நொந்து வளர்த்தெடுத்து நுண்கலைகளூட்டு வித்த
தந்தையினை சிந்தையிலே தரி.

(பொருள் :- சின்னக் குழந்தையாக நீ இருக்கும் போது, உனக்கு எவ்விதக் குறையும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, பஞ்சு போல பல துன்பங்களை அனுபவித்து நெஞ்சிலே பல துயரங்களைச் சுமந்து, உங்களை வளர்த்து அறிவூட்டிய உங்கள் தந்தையை உள்ளத்திலே என்றும் நினைவிலிருத்துங்கள்)

கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி முதலிய உடற்குறைபாடுகடையவர்களைப் பழிக்கக்கூடாது என்று எல்லா சமயங் களுமே வலியுறுத்துகின்றன. அங்கக் குறைபாடுடையவர்களின் உள்ளம் புண்படும்படி பேசுவதும், கண்சாடை காட்டுவதும் பாவமான செயல்கள் என்று சான்றோர்களும் இடித்துரைக்கின்றனர். நொண்டி ஆட்டுக்குட்டியின் உள்ளத்தைக் குளிர்விக்க அதைத் தனது தோளிலே சுமந்து சென்றார் புத்தர் பெருமான். பிம்பிசார மன்னனின் யாக சாலையை நோக்கி, ராஜகிருக நகர வீதிவழியாக, புத்தர் ஆட்டுக்குட்டியை சுமந்து சென்ற காட்சி அனைவரையும் நெகிழவைத்தது.

அங்கக் குறைபாடுடையவர்களைப் பழிப்பது, சிறுபிள்ளைத்தனம் மட்டுமல்ல, பெரும்பாவத்தை ஏற்படுத்தும் இழிசெயலுமாகும். மனித உடலிலே ஊனம் என்பது, இயற்கையானது; அது இறைவன் வகுத்த விதி அதைச் சுட்டிக்காட்டி உள்ளத்தைப் புண்படுத்தி, அதன் மூலம்

தான் பெரியவன் என்று காட்டமுயல்வது, அநாகரிகமானது. இந்த ஈனப்புத்தி அற்பர்களிடமே இருக்கும். பிறரின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுபவர்களுக்கு, வள்ளுவர் பின்வருமாறு சாட்டையடி கொடுக்கின்றார்.

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும்.

'பெருமைக்குரியவன் பிறரது குறைகளைக் கூற மாட்டான். சிறுமை உடையவன்தான் பிறரிடமுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துவான்' என்று கூறுவதன் மூலம், பிறரிடமுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டும் ஈனப்பண்புமிக்கவரே இழிவானவர்கள் என்று வள்ளுவர் எடுத்துக்காட்டுகிறார்.

''இறைவனின் குழந்தைகளாகிய மனிதரில் காணப்படும் குறைகளைச் சுட்டிக்காட்டி கண்சாடை, கைச்சாடை காட்டுவது பெரும் பாவம்'' என்று இறைவனும் அருள்நபியும் கூறியுள்ளனர். இக்கருத்தினை மூதூர் உமறுநெய்னாப் புலவர், பின்வருமாறு அற்புதமாக விளக்குகிறார்.

எண்சானுடம்பினியல்பு குறைந்தவரைக்
கண்சாடை கைச்சாடை காட்டாதே! பண்பாய்ந்த
வேத முதலவனும் மெய் நபியும் சொன்னார்கள்
சீதடைவாய் என்றே தெரி.

(பொருள் :- எட்டுச்சாண் அளவுடைய உடலில் குறைபாடுகளைக் கொண்டவர்களைப் பார்த்து, கண்சாடையோ, கைச்சாடையோ காட்டி பரிகாசிக்கவேண்டாம். அவ்வாறு செய்வது பாவ உலகிற் சேர்த்துவிடும் என்று பண்பாளனும், வேதமுதல்வனும் ஆகிய இறைவனும், அவனது உண்மை நபியாகிய முகம்மது (ஸல்) அவர்களும் கூறினார்கள்)

உழைத்து வாழ வேண்டும். பிறரது உழைப்பில் வாழ்வது இழிவானது. கொடுக்கும் கரங்களே மேலான கரங்கள்.! பிறரிடம் பிச்சைக்காக கைஏந்துவதைத் தவிர்ப்பது நல்லது. பிறரிடம் இரந்து வாழ்வதைவிட, காட்டுக்குச் சென்று, விறகு சேகரித்து அதைவிற்றுப்பிழைப்பது மேலானது. இதனால்தான் தன்னிடம் யாசகம் கேட்டுவந்த ஒருவருக்கு, கோடரி வாங்கிக் கொடுத்து, உழைத்துவாழ வழியைக் காட்டினார்கள் மாநபியவர்கள். உழைக்கின்ற மக்கள் வாழும்

நாட்டினிலே, இன்பமும், ஏற்றமும் வெற்றியும் தொடர்ந்து நிலை பெற்றிருக்கும். 'வரப்புயர...' என்று தொடங்கும் பாடலில் விவசாயம் பெருகினால், அரசனின் பெருமையும் உயரும் என்று, தமிழ் மூதாட்டி ஔவையார் கூறினார்.

செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்று கூறி பொழுதை வீணாகக் கழிக்கின்ற வீணர்களைப் பார்த்து தெய்வப்புலவர் பின்வருமாறு சாடுகிறார்.

இலமென்று இருப்பாரைக் காணின் நிலம்
என்னும் நங்கை நகும்.

செய்வதற்கு ஒன்றுமில்லையே என்று கூறிக் கொண்டு வீணாகப் பொழுதைக் கழிப்பவர்களைப் பார்த்து, நிலமங்கை சிரிப்பாள் என்று வள்ளுவர், இக்குறளின் மூலம் கூறுகிறார்.

உழைப்பின் சிறப்பை மகாகவி அல்லாமா இக்பாலும், தனது 'பூவரசம்பூ' என்ற கவிதையில், பின்வருமாறு கூறுகிறார். நெருப்பிலே வீழ்ந்துவிட்ட ஈசல்கூட, தைரியத்தை இழந்துவிடாது போராட முனைவதாக பின்வரும் பாடல் சித்தரிக்கின்றது.

கரியாய்ப் போகும் என் சடலம்
காலையரும்பும் போதெனினும்
இரவு முழுவதும் போராட
இறைவா எனக்கு வலியைத்தா!

பிச்சையெடுத்து வாழ்வதை விட, உழைத்து வாழ்வது மேலானது, என்ற கருத்தில் மூதூர் உமறுநெய்னாப் புலவர், உறுதியாக இருந்தார். விறகு வெட்டியோ, இலையைப் பறித்து விற்றோ, உழைத்து வாழ்வதே உத்தமம் என்ற மாநபியின் வார்த்தைகளை, புலவர் பின்வருமாறு பாட்டாய்த் தருகிறார்.

இரத்த விழி வென்றிசைப் பதனாலிச் செயலைக்
கருத்திலிருந் தெண்ணங் கழற்றிவிடு - வருத்தமுடன்
இந்தனத்தைச் சுமந்தேனும் இலைபறித்து விற்றேனும்
நந்தலறுமோர் தொழிலை நாடு.

(பொருள் :- பிச்சை எடுத்தல் இழிவானது என்று கூறப்படுவதால், அவ்வாறான தொழிலைச் செய்யும் எண்ணத்தை உள்ளத்திலிருந்து அகற்றி விடுங்கள். விறகு சுமத்தல், இலைகளைப் பறித்து விற்றல் போன்றன துன்பங்கள் உள்ள தொழில்களாயினும் அவ்வாறான ஒரு தொழிலையே விரும்பிக்கொள்ளுங்கள்)

மண்ணில் வாழும் மனிதர்கள் சீர் பெற்றவர்களாக செம்மையுற்றவர் களாக வாழ இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன. மனக்கறைகளை நீக்கி, உள்ளத்திலே ஞான ஒளியைப் பாய்ச்சிட, சங்கமருவிய கால அற இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. பண்புகள் பாழ்பட்டு, நெறிமுறைகள் சீரழிந்து, ஒழுக்கப் பண்புகள் காணாமல்போன காலகட்டங்களில் மானுட நேயங்களை, கொஞ்சம் கொஞ்சமாக வளர்க்கும் பாரிய பொறுப்பிலான, இலக்கியங்களே ஏற்றுக்கொண்டன.

மனித வாழ்வைச் செம்மைப்படுத்த, இவ்வுலகில் அவதரித்த அண்ணலாரும், தற்பெருமை கொண்டு தடுமாற்றங்கொள்ளாதே! என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

நல்ல மனமும் அகங்காரம் என்னும் நோய் பற்றிக் கொண்டால், பாழ்பட்ட மனமாக மாறிவிடும். கர்வம் கண்ணியத்தையும் புண்ணியத்தையும் அழிக்கும் நெருப்பாக அமைந்து விடுகின்றது. பொய்யா மொழிப்புலவரும் தனது ஈரடிவெண்பாவில்,

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்

என்று பாடினார். அதாவது பெருமை என்னவென்றால் பெருமையடைவதற்கான காரணம் ஏற்பட்ட போதிலும், பெருமிதம் அடையாது இருத்தலாகும். சிறுமை என்பது பெருமையடைவதற்கான காரணம் இல்லாத போதும், கர்வம் கொள்வதாகும்.

மாநபியின் போதனைகள் உலகை துன்பத்திலிருந்து விடுவிக்கும் ஒளிக்கீறல்களாகும். மாநபியின் வாழ்வியலும், தத்துவங்களிலும் தனது உள்ளத்தைப் பறிகொடுத்தவரே மூதூர் உமறுலெப்பைப்புலவர் ஆவார். பெருமையடிப்ப்வனை வள்ளல் நபியவர்கள் கண்டித்துள்ளார்கள். தற்பெருமைகொண்டு, தன்னையிழந்து நெறிபிறழ்ந்துவிடாதே! பெரும் செல்வ த்தைக் கொண்டிருந்தவர்களும், பெரும் படைகளுக்கு அதிபதிகளாக

இருந்த மன்னர்களும் இப்போது எங்கே என்று சிந்தித்துப்பார். ஆறடி மண்ணில் அடங்க இருக்கும் நீ கர்வம் கொள்ளலாமா? என்ற மாநபியின் போதனைகளை, மூதூர் உமறுலெப்பைப் புலவர் பின்வருமாறு, நெஞ்சினிக்கப்பாடுகின்றார்.

தற்பெருமைகொண்டு தடுமாற்றங் கொள்ளாதே!
நிற்பெருமைக் கென்னாம் நினைத்துப்பார் - இப்புவியில்
மண்ணிற் படையுண்டாய் வாழ்வினிறுதியில்
மண்ணிற் போய் அடங்குவாய்.

(பொருள் - தற்பெருமை கொண்டு நிலை தடுமாறி வாழாதே! பூமியில் நீ எவ்வளவுதான் பெருமையுடன் வாழ்ந்தாலும், இறுதியில் மண்ணில் சென்றே உனது வாழ்வு அடங்க இருக்கிறது. எனவே பெருமையடிப்பதற்கு, உன்னிடம் என்ன தகுதி உள்ளது என்று சிந்தித்துப்பார்)

நாம் வாழ்க்கையிலே சிறப்பையும் பெருமையையும் பெற வேண்டுமானால், நல்லவர்களோடு நட்புக்கொள்ள வேண்டும். நல்லாரோடு உரையாடுவதும், நல்லாரோடு உறவாடுவதும் வாழ்வில் ஏற்றத்திற்கு வழிவகுக்கும்.

உள்ளத்திலே நஞ்சும், நாவிலே நறுந்தேனும் கொண்ட வஞ்சகரோடு உறவாடவேண்டாம் என்பது அண்ணல் நபியின் அமுத மொழியாகும். 'தீயா ரோடிணங்கியிருப்பதுவும் தீது' - என்று ஒளவையார் கூறினார். உள்ளத்திலே நஞ்சையும், நாவிலே நறுந்தேனையும் கொண்ட வஞ்சகர்களால் எமக்கு எப்போதும் தீமை ஏற்படும்.

பூவோடும், பொட்டோடும், இராமன் வணங்கும் தாய் என்ற பெருமையோடும் வாழ்ந்த கைகேயி, மந்தரையின் (கூனி) சகவாசத்தினால் கணவனை இழந்தாள். தான் பெற்ற பரதனின் வாயாலேயே 'என்னைப் பெற்ற கொடியவளான கைகேயி (என்னைப் பெற்ற தீயவள்) என்று நிந்திக்கப்படும் இழிவை எய்தினாள். ஆகவே நாம் வாழ்த்தப்படுவதும், தூற்றப்படுவதும் நாம் உறவாடும் மக்களின் பண்பிலேயே தங்கியுள்ளது. வையத்தில் வாழ்வாங்கு வாழும் வழிகள் பல சொன்ன வள்ளுவரும், களைய வேண்டிய முள் மரத்தை, ஆரம்பத்திலேயே களைந்துவிடவேண்டும் என்கின்றார்.

இளையதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து

கடுகளவு விடயத்திற்கும் கடும்போர் நடாத்திய காட்டறபிகளை, மலையளவு விடயத்தையும் மனிதப் புனிதர்களாக மாநபியவர்கள் மாற்றினார்கள். பெருமானாரின் சிந்தனைச் சுரங்கத்திலிருந்து உதிர்ந்த தத்துவ முத்துக்கள் மக்களின் வாழ்வைச் செழுமைப்படுத்தின. உள்ளத்திலே நஞ்சையும், உதட்டிலே தேனையும் கொண்டிருப்பவர்களோடு விழிப்பாயிருங்கள். அவர்களால் உங்களுக்கு எப்போதும் துன்பங்களே ஏற்படும் என்ற பெருமானாரின் பொன்மொழியை, மூதூர் உமறுலெப்பைப் புலவர், தங்கத்தமிழிலே, உள்ளத்திரையிலே என்றும் நிலைபெற்றிருக்கும் வண்ணம், பின்வருமாறு தருகின்றார்.

உள்ளத்தே நஞ்சும் உதட்டில் நறுந்தேனும்
கொள்ளுங் கயமைக் குணத்தோனை - கள்ளமிலா
உ்த்தமனென் றெண்ணி உறவாட - வேண்டாங் காண்
எத்தினமும் செய்வான் இடர்.

(பொருள் - உள்ளத்திலே நஞ்சையும், உதட்டிலே இனிமையான தேனையும், வைத்துள்ள கயமைக் குணமுடையவனை உத்தமன் என்று எண்ணி உறவாட வேண்டாம். அவன் எப்போதும் தீமையே செய்வான்)

ஆழிசூழ் இவ்வுலகமும், இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருட்களும், அழியும் இயல்புடையன. மாலையாகினும் மலர் வாடி விடுவதைப்போல், முதுமைநிலை எய்தியதும் அழகும் குறைவடைந்து, உடல் இயக்கத்திறனும் குன்றி முதுமையில் மனிதர் செயலற்று நிற்பர். இவ்வுலகில் மனிதவாழ்வு அற்ப ஆயுளைக் கொண்டது. மனித உடல் மண்ணில் சாய்வதற்கு முன்பு - அவனது உடலில் உள்ள உணர்வுகள் அடங்கிப் போவதற்கு, முன்பு - அவன் நற்காரியங்களைச் செய்யவேண்டும். இதனால்தான் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றும் 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது' என்றும் ஆன்றோர்கள் கூறினார்கள்.

உலகில் மரணம் சாதாரணமானது. மரணத்தைக் கண்டு அழுது புலம்பி, சோகக் கடலில் மூழ்குவது அறிவுடைமையாகாது என் தமிழ் இலக்கியங்கள் போதனை செய்கின்றன. செந்தமிழ்க் காப்பியமாகிய கம்பராமாயணம், மரணத்தைப் பற்றிப் பல இடங்களிலும் விளக்கி நிற்கின்றது. தந்தையின் மரணச்செய்தியைக் கேட்டு இராமன் கல்லும்

கரையும் வண்ணம் கதறுகிறான். பார்ப்பவரின் கண்கள் கசியும் வண்ணம் பெரும் துயரடைந்து கதறுகிறான். அவனுக்குப் பிறப்பும், இறப்பும் இயற்கையானது என வசிட்டர் பின்வருமாறு அறிவுரை பகர்கின்றார்.

"இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதை
மறந்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ"

வான்புகழ் வள்ளுவரும், மரண நேரம் வந்து நாக்கு உள்ளே இழுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பே, நன்மைகளை நாம் புரிய வேண்டும் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

நாச்செற்று விக்குன்மேல் வாரா முன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்

வாழ்க்கையை வளமாக்க இவ்வையகத்தில் அவதரித்த வள்ளல் நபியும், காலதேவன் எம்மை அரவணைக்க முன்பு - நோய் எம் உடலைத் தழுவிட முன்பு - நாம் நற்கருமங்களைச் செய்துவிட வேண்டும் என்று நவின்றார்கள். பெருமானாரின் இப்போதனை உமறுலெப்பைப் புலவரின் பின்வரும் பாடலில் தேனாய் இனிக்கின்றது.

காலன் வருமுன்னே கண் பஞ்சடையா முன்
மேலதனில் நோய் வந்தே மேவாமுன் - ஞாலமதில்
தவம் புரிந்து கொள்ளு தவறிருந் தக்கால்
அவமன்றோ வாழ்க்கை நெறி

(பொருள் - எமன் எம்மை நெருங்கமுன்பு, முதுமையினால் எமது கண்கள் செயலிழந்து போகுமுன்பு, உடலை நோயானது ஆக்கிரமிக்க முன்பு, பூமியில் நற்காரியங்களைச் செய்து கொள்ளுங்கள். அவ்வாறில்லாவிட்டால், உங்கள் வாழ்க்கை எப்பயனுமற்றதாகிவிடும்)

# பெண் கல்வி

இன்று அபிவிருத்திக்கு அவசியமான ஒரு அம்சமாக - சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடுகின்ற ஒரு சக்தியாக - பெண்கல்வி அமைகின்றது. பெண்விடுதலை பற்றியும், பெண்வர்க்கத்தின் மறுமலர்ச்சி பற்றியும் பல இலக்கியங்கள், பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றன. வாழுகின்ற உரிமையும், சொத்தை அனுபவிக்கும் உரிமையும் மட்டுமல்ல கல்வி உரிமையும் அவர்களுக்கு கிடைத்திடவேண்டும் என்று பல கவிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எட்டயபுரத்திலே பிறந்து, ஏற்றமிகு கவிதைகள் மூலம் 'பாட்டுக்கொரு புலவன்' என்ற நாமம் பெற்ற, பாரதி, பெண்கல்வியை சிறப்பாக வலியுறுத்துகின்றார். பெண்கள் கல்வியிலே முன்னேறி சமூகத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் அரிய பல பணிகளைப் புரிந்திட வேண்டும் என்று அவாவுற்றார். அந்த அவாவின் விளைவாக அவரது கற்பனைத் தோட்டத்திலே 'புதுமைப்பெண்' என்ற எழில்மிகு மலர் மலர்ந்தது.

"ஆண் பெண் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி
இவ்வையகம் தழைக்குமாம்" என்று புதுமைப் பெண்ணில் பாரதி பெண் விடுதலைக்காக அறைகூவல் விடுக்கிறார்.

மண்ணில் வாழும் பெண்கள் கணவரின் குறிப்பறிந்து நடந்திட வேண்டும். அவ்வாறு நடந்திட அவர்களுக்கு கல்வி அவசியம் என்பது மூதூர் உமறுலெப்பைப் புலவரின் நிலைப்பாடு - சங்கமருவிய காலத்தில் வாழ்ந்து, தமிழ்மறையைத் தந்த வள்ளுவரும், கணவனின் வருவாய்க்கு இணங்க வாழ்பவளே சிறந்த மனைவி என்ற கருத்தை பின்வரும் குறளில் தருகிறார்.

மனைத் தக்க மாண்புடையவள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை

இலங்கை இஸ்லாமிய இலக்கிய வரலாற்றிலே என்றும் ஒளிவீசும் வரம் பெற்ற உமறுலெப்பைப் புலவரும், வள்ளுவரும், பாரதியும் கூறிய வழியில் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, வளமான பல பாடல்களைத் தீட்டியுள்ளார். அப்பாடல்களில் ஒன்று பின்வருமாறு

இல்லறத்தோரை யிழுத்திடு வதற்கா
யெழிற்கரம் பிடித்திடு கணவன்
நல்லியற் குறிப்பை யுணர்ந்ததின் படியே
நடந்திட வன்பொடு பழக
சொல்லருங் கர்ப்பச் சிசுவினைப் பேணச்
சுத்தமாயுடலுடையதனை
மெல்லியலாளர்கள் வைத்திருப்பதற்கு
வியன் கலை யவசியம் வேண்டும்.

ஒரு குடும்பத்தின் ஆரோக்கியம், அக்குடும்பத்தின் தலைவியான பெண்ணின் கையில்தான் தங்கியுள்ளது. பொருளீட்டும் பணியிலே தம்மை முழுமையாக அர்ப்பணிப்பதாலும் அதிக நேரத்தை வீட்டுக்கு வெளியே செலவிடுவதனாலும் ஆண்கள் தமது வீட்டின் சுகநலன், சேமிப்பு, போசாக்கு, சம்பந்தமாக அதிகமான கவனத்தை செலவழிக்க முடியாதவர்களாக உள்ளனர். எனவே வீட்டின் தூய்மையும், பிள்ளைகளின் உடல், உள நலன்களும், சிக்கனமும், சேமிப்பும் பெண்களின் கையிலேயே உள்ளன. வருவாய்க்கு ஏற்ப வாழ்ந்து வளமான எதிர்காலத்திற்காக சேமித்திடவும், பிள்ளைகளுக்கு பிணிகள் வராமல் தடுத்திடவும், பெண்கள் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்கள் கல்வியின் அவசியத்தை பொதுவாகவும், பெண்கல்வியைச் சிறப்பாகவும் போற்றுகின்றன. தமிழ்மூதாட்டி ஔவையார் பின்வருமாறு கல்வியின் முக்கியத்துவத்தை கவிதையால் தருகின்றார்.

இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவுள்ளவரைக்
கனவினும் நனவினும் காண்பது தானே!

இறைவனைத் தொழுவதைவிட இனிதானது அறிஞரோடு சேர்தல் என்று, ஔவையார் கூறி கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகின்றார்.

தனது சீரிய சிந்தனைகளைப் பாட்டில் அமைத்து, மனிதகுலம் வாழ தனது புலமையாற்றலை பயன்படுத்திய, மூதூர் உமறுநெயனாப் புலவரும் பெண்கல்வியை வலியுறுத்துகின்றார். குழந்தைகளை நலமாக ஈன்றிடவும், வந்த பிணிகளை ஓட்டிடவும், பழுதறப் பிள்ளைகளை வளர்த் திடவும் கல்வி உறுதுணை பயக்கும் என்று புலவர் அறிவுறுத்துகின்றார்.

பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பதால் அக்கண்கள் ஆரோக்கிய மாகவும், அழகாகவும் அமைந்திட வேண்டும். அக்கண்கள் வளமாக இருந்திட அறிவு முக்கியம். ஆகவே சமூகம் எழுச்சிபெற்றிட பெண்கல்வி அவசியம் என்பதை மூதூர் உமறுலெப்பை புலவர் பின்வருமாறு கூறுகின்றார்.

குழவியை யீன்று வனமுலை யமுதுங்
கொடுக்கு மாறறிந்தின் படியே
ஒழுகிட வதற்காம் சில சிறு பிணி வந்
துற்றக்கா ல விழ்தமு முதவ
கழுவியக் குழந்தை யுடலுறுதிக்கும்
கழன்றிட வதன் சுகாதாரம்
பழுதறப் பேணி வளர்த்திடக் கல்வி
பயன்தரு முறுதுணை பயன்கும்.

(பொருள் - பிள்ளைகளை நன்றாகப் பெற்றெடுத்து, தாய்ப்பால் கொடுக்கும் முறையை அறிந்து அதன்படி ஒழுகி நோய்கள் அண்டிடாது பாதுகாத்து, சுகநலத்துடன் அதனை வாழவைக்க பெண்ணுக்கு கல்வி அவசியமாகும்)

இன்றைய உலகிலே பெண் சமுதாயத்தின் ஆணிவேர் என்று போற்றப்படுகின்றாள். வறுமை வந்து வாடா வண்ணம் குடும்பம் என்ற படகை, செவ்வனே ஓட்டிச் செல்வதற்கு பெண்ணுக்கு அறிவு அவசியமாக உள்ளது. தமது இல்லத்தை நாடி வரும் அகதிகளுக்கும், அல்லல் படுவோருக்கும் இன்மொழி கூறி இருப்பதைக் கொடுத்து அவர்களது மனங்களை மகிழ்விக்க, இன்றைய மாதருக்கு அறிவும், ஆற்றலும் அவசியமாகும்.

பெண்கள் பயனுள்ளவர்களாக இவ்வுலகினிலே வாழவேண்டும் பயனில்லாத மனிதர்களாலும் பயனில்லாத பொருட்களாலும் பயனே இல்லை என்று விவேக சிந்தாமணியில் இடம்பெறும் பின்வரும் பாடல்வரிகள் எமக்கு எடுத்துக்கூறுகின்றன.

ஆபத்துக்குதவாப் பிள்ளை அரும்பசிக்குதவா அன்னம்
தாபத்தைத் தீரா தண்ணீர் தரித்திரமறியாப் பெண்டிர்
கோபத்தையடக்கா வேந்தன் குரு மொழி கொள்ளாச்சீடன்
பாபத்தை தீராத்தீர்த்தம் பயனில்லை ஏழுந்தானே!

இதன்படி ஒரு பெண் தான் சார்ந்த குடும்பத்திற்கும், தரணியில் வாழும் மனிதர்களுக்கும் பயனுள்ளவளாக மாறவேண்டுமானால், அவள் கல்வி அறிவைப் பெறவேண்டும்.

குறள் தந்து அறம் வளர்த்த வள்ளுவரும் இல்வாழ்வுக்கான சிறப்புக்கள் மனைவியிடத்து இல்லையானால், அந்த இல்வாழ்க்கையில் எவ்வளவு சிறப்பு இருந்தாலும் அதுவாழ்வு ஆகாது, என்று கூறுகின்றார். பின்வரும் குறட்பா, அவரது கருத்தை வெளிப்படுத்துகின்றது.

மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின், வாழ்க்கை
எனை மாட்சித் தாயினும் இல்

மூதூரிலே பிறந்து முத்தமிழை வளர்க்க தன்வாழக்கையை அர்ப்பணித்த உமறுநெய்னாப் புலவரும், பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். சமூகம், நற்பண்புகள் மலிந்து விளங்குவதற்கும், நாடு நானிலத்தில் ஏற்றம் பெறுவதற்கும், பெண்கள் கல்வியில் மேலோங்க வேண்டும். "பக்கத்து வீட்டாரோடு பகையின்றி வாழ்ந்திட, ஏழைகளின் துயரத்தை இன்முகங்கொண்டு நீக்கிட, ஐங்குரவரையும் போற்றி ஒழுகிட ஒரு பெண்ணுக்கு கல்வி அவசியமாகும்.

அண்டை வீட்டா ரோடிணங்கி வாழ்வதற்கும்
அயலவர் ஏழைகள் துயரங்
கண்டு நல்லுதவியளித்திடுவதற்கும்
கனிவுடனானதைக் காதரவு
கொண்டு வேண்டியதைக் கொடுத்துதவுவதற்குங்
குரவரை மதித்தவர்க்குரிய
தொண்டு செய்தவதற்குந் துகளறு கல்வி
துணைநின்று செயல்புரிந்திடுமே

(பொருள் - அண்டைவீட்டாரோடு பகைமையில்லாது வாழ்வதற்கும் அயலவர், ஏழைகள், அனாதைகள் ஆகியோருடன் கருணையுடன் நடப்பதற்கும், ஐங்குரவரை மதிப்பதற்கும் கல்வி அவசியமாகும்)

கல்வியானது அக இருளை நீக்கி, அருள் ஒளிபரவ உதவும் கற்றறிந்தோர் நிரம்பிய சமுதாயத்திலே, கயமையும், கபடப் பண்பும் குறைவாகவே அமையும். மண்ணில் தர்மப்பயிர் செழித்து வளர்ந்திட பாவமுட்கள் கருகி மாண்டிட கல்வி அவசியமாகும். இதனால்தான்

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே

என்று வெற்றிவேற்கை கூறுகிறது. மனிதன் பக்குவமாய் மண்ணில் நடமாடிடவும், படுகுழியில் வீழ்ந்திடாது தடுத்திடவும், கண்கள் தேவை. இவ்வுலக வாழ்க்கையை ஓட்டிட இரு கண்களும் எவ்வாறு அவசியமோ, அதுபோல வாழ்க்கையின் நலன்களை நாம்பெற்றிட, எண்ணும் எழுத்தும் அவசியமாகும். இதனால்தான் வள்ளுவர்,

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

என்று கூறினார். நல்லூரில் பிறந்து சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபட்ட நாவலர், கல்வியானது உலகிலுள்ள எல்லாச் செல்வங்களை விடவும் ஏற்றமானது என்பதைப் பின்வரும் உரைநடையூடாகக் கூறினார்.

"......... செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும். கல்விப் பொருளோ ஒருவ ராலும் கொள்ளப்பட மாட்டாது. செல்வப்பொருள் வெள்ளத்தா லாயினும், அக்கினி யாலாயினும் அழியும் கல்விப் பொருளோ ஒன்றாலும் அழியமாட்டாது."

அநாகரீகத்தில் மூழ்கியிருந்த அராபியரை அறிவு மறுமலர்ச்சி மூலம், உலகத்திற்கே நாகரீகத்தைப் போதிக்கும் அறிஞர்களாக மாற்றியவர் மாநபியவர்கள். இரவு முழுவதும் நின்று வணங்குதைவிட, ஒரு நிமிடம் சிந்திப்பது மேலானது என்ற கருததை மாநபியவர்கள் மக்களுக்கு முன்வைத்ததன் மூலம், சீரய சிந்தனைகளுக்கு சொந்தக்காரர்களாக முஸ்லிம்களை ஆக்கினார்கள். போர்முனையிலே இறைவனுக்காகப் போராடி உயிர்துறக்கும் தியாகியின் இரத்தத்தைவிட எழுத்தாளனின் பேனா மை புனிதமானது என்று, வளளல் நபி கூறினார்கள். ஏனையவர்களைவிட நபியவர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதே உமறுநெய்னாப் புலவரின் நம்பிக்கை. அந்த நம்பிக்கை பின்வரும் பாட்டில் பிரதிபலிக்கின்றது.

மார்க்கஞ் சொல் புனித யுதத்திற் சென்று
மாய்த்திடு தியாகியின் வீர
ஆக்கையினோடு மிரத்தத்திற் புனித

மானதா றிருள் கைப்பேனா
தூக்கிய மையயென்னுரைத் தனரிறசூல்
தோமறு கல்வியின் மகிமை
மீக்கிளர் சாதி சூழலகினிலே
வேறெவர் கூறினார் இவர் போல்

(பொருள் - மார்க்கத்தின் கட்டளைப்படி புனிதப்போரில் ஈடுபட்டு மரணிக்கும் தியாகியின் இரத்தத்தைக் காட்டிலும் எழுத்தாளனின் பேனா மை புனிதம் மிக்கது. பெருமானார் கல்விக்கு முக்கியம் தந்து இவ்வாறு கூறியதுபோல இவ்வுலகில் வேறு எவர் கூறினார்கள்)

மனிதன் எப்பாடுபட்டாவது - எந்த விலை கொடுத்தாவது தேடிப் பெற்றிட வேண்டிய அம்சம் கல்வியாகும். இம் மண்ணகத்திலே கல்வியானது எங்கு காணப்பட்ட போதிலும், அக் கல்வியை அங்கு சென்று பெற்றிட முனைவது மனிதராகப் பிறந்த ஆண் பெண் இருவருர் மீதும் கடமையாகும். இதனால்தான் "சீனா சென்றேனும் சீர்கல்வியைப் பெற்றிடுக" என்று வள்ளல் நபி கூறினார்கள் இக்கருத்தை அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் (இலங்கையில் இஸ்லாம்) என்ற கட்டுரையில்

"சீன தேசம் வரை சென்றாயினும் அறிவுகிடைக்கக் கூடிய இடங்களில் இருந்து அதனைப் பெறுக" என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாக்காகும். இந்தக் கொள்கை காரணமாகவே புதிய அறிவை சேகரித்து, எடுத்துக் கொள்ளும் சக்தி இஸ்லாத்திற்கு தொன்றுதொட்டு இருந்துவரும் விசேட அடையாளமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு எங்கு சென்றாயினும், கல்வியைப் பயில்வது பெண்களுக்கும் கடமை என்று, மாநபியவர்களின் போதனையாக அமைகின்றது. இப்போதனை உமறுநெய்னாப்புலவரின் பின்வரும் பாடல்வரிகளில் பொதிந்துள்ளன.

கலையினைப் பயிலல் கடமையானவர்க்கும்
காரிகையார்க்குமு் மென்றுரைத்தார்

சமூகத்தில் முன்னேற்றம் ஏற்படவும், குடும்பத்தின் வறுமையைப் போற்றவும் அவசியமானது பெண்கல்வி. மாநபியவர்கள் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தமை புலவரின் உள்ளத்தடாகத்தில் ஆனந்த அலைகளை ஏற்படுத்தியது. "நபி வழி நம் வழி" என்று நாம்

வாழ்வோமானால் இம்மையிலும் மறுமையிலும் ஏற்றம் பெறுவோம் என்பதில் அசையாத நம்பிக்கை புலவருக்கு இருந்தது. அதனால்தான்

"நபிமொழி வழியே பலன்தரு கல்வி பயிலுதல் வேண்டும்"

என்று புலவர் உறுதியுடன் கூறுகிறார். பெருமானாரின் இப்பொன் மொழிகளை மூதூர் உமறுநெய்னாப்புலவர் பின்வருமாறு பாட்டாய்த் தருவது இலக்கிய சுவைஞர்களுக்கு பெருவிருந்தாக அமைகிறது.

தொலைவுறு சீனதேசம் சென்றேனும்
துகளறு நெறிவழி யொழுகும்
கலையினைப் பயிலல் கடமையானவர்க்குங்
காரியார்க்கு மென்றுரைத்தார்
நிலவுலகினிலே வாழ்பவர் எவரும்
நேர்மைகொள் நபிமொழி வழியே
பயன்தரு கல்வி பயிலுதல் வேண்டும்
பர்வையர் விலக்கல கலைக்கே

(பொருள் - தொலைவிலே உள்ள சீனாவுக்குச் சென்றாயினும் நேர்மையான பாதையில் செல்ல உதவும் கல்வியைப் பெறுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் கடமை என்று நபி அவர்கள் கூறினார்கள். நேர்வழி சென்ற நபியவர்களின் வாக்குப்படி கல்வியை தேடிப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். இது பெண்களுக்கும் பொருந்தக்கூடியது)

"கற்றாய்ந் தொழுகு" என்பது ஆன்றோர் வாக்கு. அதாவது கல்வியை நன்றாகக் கற்று அதன்படி நாம் வாழ்ந்திட வேண்டும். வான்புகழ் வள்ளுவரும் சந்தேகமறக்கற்று அதன்படி ஒழுகிட வேண்டும் என்று எமக்குப் பணிக்கின்றார். ஈரடி வெண்பாவிலே வள்ளுவ நாயனார் பின்வருமாறு அக்கருத்தை அற்புதமாகத் தருகிறார்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

தமிழன்னைக்கு பாமாலை சூட்டியதான் மூலம் அவனது அழகை மேலும் ஓங்கிடச் செய்த மூதூர் உமறுநெய்னாப்புலவரும் கற்றபடி ஒழுகு என்பதைப் பின்வரும் பாடல்வரி மூலம் கூறுகிறார்......
"தினங்கற்று யறிவுடையவர்களா லொழுகு......

இப்பூமியையும் அண்டசராசரங்களையும் படைத்த இறைவனின் தத்துவத்தை பல கவிஞர்களும் வியந்து, போற்றிப்படியுள்ளனர். விபுலாநந்த

அடிகள் "தேவி வணக்கம்" என்ற கவிதையிலே

"தாயாகித் தரணியைத் தோற்றுவித்த
தனிமுதலே! தவத்தார் வாழ்வே!......"

என்று தனது இறைபக்தியை வெளிப்படுத்துகிறார். இது போல பக்தி உள்ளத்தைக் கொண்டிருந்த மூதூர் உமறுநெய்னாப்புலவரும், இறைவனின் இணையற்ற ஆற்றலைப் பாடுவதிலே புளகாங்கிதம் அடைகின்றார்.

...பூவெலா மமைத்த தனிமுதலோனின்...

என்று பாடி புலவர் தனது பக்தி உள்த்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

மேலும் கல்வி முக்கியமானது என்று ஏனைய புலவர்கள் பாடும் வேளையில் உமறுநெய்னாப்புலவர் கல்வியானது உயிரைவிடவும் முக்கியமானது என்ற கருத்தை "ஆவியின்இனிய" என்ற சொற்களின் மூலம் தெளிவாக்குகிறார். சமுதாயம் ஏற்றம் பெற்றிட பெண்கல்வி அவசியம். பெண்கல்வியை வளர்க்காமல் சமுதாய ஏற்றத்தைக் கண்டிட முடியாது. என்பதை நிச்சயமாக உணர்ந்துகொண்ட புலவர் "... நாரியர் கல்வி நயமுறக்கற்றிடல் வேண்டும்...." என்று வலியுறுத்துகிறார். அவரது கருத்துக்கள் பின்வரும் செய்யுளில் பொதிந்துள்ளன.

ஆவதாலதனை அனுதினம் கற்று
யறிவுடையவர்களா யொழுகி
பூவெலா மமைத்த தனிமுதலோனின்
பொருத்தத்துக்குரிய ராய் வாழ்ந்து
ஆவியின்இனிய மக்களுக்குரிய
ஆஸ்தியாங் கலைக்களஞ்சியத்தை
நாவினிற் பயிற்ற நாரியர் கல்வி
நயமுறக் கற்றிடல் வேண்டும்.

(பொருள்- எனவே கல்வியைத் தினமும் கற்று அறிவுடைவயராக வாழ்ந்து உலகெல்லாம் படைத்த ஒப்பற்ற இறைவனுக்கு பொருத்தமுடையவர்களாக வாழவேண்டும். மேலும் உயிரைவிட மேலான கல்வியை பிள்ளைகளுக்கு வழங்கிட பெண்கள் சிறப்பாகக் கற்றிடல் வேண்டும்.

# உசாத்துணை நூல்கள்

01. புறநானூறு
02. ஏலாதி
03. திருக்குறள்
04. நாலடியார்
05. ஔவையார் பாடல்கள்
06. பெரியபுராணம்
07. வெற்றிவேற்கை
08. விவேகசிந்தாமணி
09. கம்பராமாயணம்
10. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
11. பாரதியார் கவிதைகள்
12. கல்வி - நர்வலர் கட்டுரை
13. தேவி வணக்கம் - விபுலாநந்தர்
14. சீறாப்புராணம் - உமறுப் புலவர்
15. பிச்சமூர்த்தி கவிதைகள்
16. ராஜநாயகம் - வண்ணக்களஞ்சியப் புலவர்
17. இலங்கை வளம் - சோமசுந்தரப்புலவர்
18. அழகின் சிரிப்பு - பாரதிதாசன்
19. மரணரத்தின மாலை - அப்துல்சமது ஆலிம் புலவர்
20. புத்தளப் பிரதேசப் புலவர்கள் - கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ்
21. உபதேசக் காவியம் - வாழைச்சேனை மீரா முகைதீன் ஆலிம்
22. சொர்க்கநீதி - செய்யது அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம்
23. வான் அலைகளில் தேன் துளிகள் - இசைக்கோ எஸ்.எம். நூர்தின்
24. ஓ விஸ்வாசம் மிக்கவனே! - புட்சிக் கமால்
25. "எதிரொலியும் மறையந்தாதியும் - கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை
26. "இலங்கையிலே இஸ்லாம் - கட்டுரை ஏ.எம்.ஏ. அஸீஸ்
27. ஆசியஜோதி - தேசிக விநாயகம் பிள்ளை
28. புலவர் மணி சரிவுத்தீன் செய்த தமிழ்
29. பாவாரம்
30. பூவரசம் பூ - அல்லாமா இக்பால்
31. ஆசாரக்கோவை - அப்துல் மஜீதுப் புலவர்
32. வடக்கு கிழக்கு மாகாண மீலாத்துண் நபிவிழா சிறப்பு மலர் 2004

# மூதூர் உமறுநெய்னாப்புலவர்

வ.அ.இராசரத்தினம்

இஸ்லாமியத் தமிழ் பேரிலக்கியமான சீறாப்புராணத்தைப் பாடிய உமறுப்புலவரை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். ஆனால் அதே உமறுப்புலவரின் பெயரைத் தரித்துக் கொண்டு எம்மூரிலும் ஒரு புலவர் இருந்தார். ஆமாம்! அவர் புலவரே தான். இம்மென்று முன்னே எழுநூறும் எண்ணூறும் பாடக்கூடிய சொல்வன்மையும், புலமையும் நிறைந்தவர். ஆனாலும் வெளியுலகு அவரை அறியவில்லை.

காட்டிலே கணக்கற்ற பூக்கள் மலர்கின்றன. ஆனால் அவை மணம், தம் இனிமையைக் காற்றில் பறக்கவிட்டு மடிகின்றன என்று ஆங்கிலக் கவி பாடியிருப்பது போல வெளியுலகத் தொடர்புகள் இன்மையாலும் வேறு சில வசதியீனங்களாலும் தனது புலமையை வெளியுலகு அறிந்து கொள்ளாமலே மாண்டு மடிந்து போன புலவர்களில் ஒருவர்தான் மூதூர் உமறுப்புலவர்.

1938 ஆம் ஆண்டு பாடசாலை மூன்றாந்தவணையின்போது அந்தக் காலத்தில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்த நான் சிரேஷ்ட பாடசாலை தராதர வகுப்பில் புகுந்தேன். பாடசாலையில் நான் முதல் மாணவன்தான். இலக்கியப் பாடத்தில் புலி. எஸ்.எஸ்.ஸி வகுப்புக்கு வில்லிபாரதத்தின் சூது போர்ச் சருக்கமும், கிராதார்க் கனியம் என்ற வசன நூலும் பாடப்புத்தகங்கள்.

அந்த ஆண்டு மார்கழி மாதத்தில் நான் சூது போர்ச் சருக்கத்தோடு, என் மாமனார் முறையினரான பண்டிதர் சவரிமுத்துவிடம் பாடங் கேட்கப் போனேன். அவர் வீட்டிலேதான் நான் உமறுநெய்னா அவர்களை முதன் முதலிற் சந்தித்தேன்.

வெள்ளைக்காரன்போல் மேலே அரைக்கை, வெள்ளைச் சேர்ட். சேட்டின் மேலே ஒரு துவாய். சற்று குள்ளமான மெலிந்த உ்ருவம். இடுக்கிக் கொண்டிருப்பது போல பூனைக்கண்கள். பீடியை ஊதித் தள்ளிக் கறுத்துப் போன உதடுகள்.

நான் சென்ற நேரம் பண்டிதர் சவரிமுத்து அவரது விறாந்தையில் இல்லை.உமறுநெய்னாப் புலவர்தான் அவரைக் காத்துக் கொண்டு விறாந்தையில் இருந்தார், பீடியைப் புகைத்துக் கொண்டு. அந்தக் காலத்து நரி பீடியும் அவரைப்போல மெலிந்து குள்ளமானது தான்.

என்னைக் கண்டதும் என் கையிலிருந்த சூது போர்ச் சருக்கத்தை வாங்கிக் கொண்டு 'எது வரை படித்திருக்கின்றாய்? என்று கேட்டார் உமறு நெய்னாப் புலவர்.

தருமரும் சகுனியும் சூதாடிக் கொண்டிருக்கும் பாடற்பகுதியைக் காட்டினேன். புத்தகத்தைத் தூக்கிய புலவர் பாடத் தொடங்கி விட்டார்.

காயமுற்றும் வஞ்சமே
கலந்ததன்ன கள்வன்மேல்
நேயமுற்று நின்று தானும்
நிகர்பிடித்த தென்னவே
மாறமுற்ற கவலும் அந்த
மாமன் வல்லபத்திலே
தாயமுற்றிடங் கொடாது
தருமனைச் சதித்ததே

என்று பாடியவர் மீண்டும் மீண்டும் அதே பாடலையே இசையோடு பாடிக்கொண்டிருந்தார். மூன்று தரம் பாடி முடித்த பின்னர்

தான தன்ன தன்ன தன்ன
தன்ன தன்ன தன்ன தன்னனா
தான தன்ன தன்ன தன்ன
தன்ன தன்ன தன்னனா

என்று மீண்டும் பாடினார். நான் அவரையே மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். பாடி முடிக்க முன்னர் பாட்டிற்குப் பொருள் சொன்னார். தொடர்ந்து ஐந்தாறு பாடல்களை பாடிப் படிப்பித்தார்.

அவர் சந்தி பிரித்துப் பாடுவதிலேயே பொருளை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

இத்தனைக்கும் அவர் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர். இலக்கிய, இலக்கணங்களை எங்கே யாரிடம் படித்தாரோ எனக்குத் தெரியாது. சீறாப்புராணம் முழுவதுமே ஏறக்குறைய அவருக்கு மனனமாக இருந்தது. அந்தப் புராணத்தில் எந்த இடத்தைக் கேட்டாலும் அப் பாடலுக்குப் பொருள் சொல்வார். அதைப் போலவே சைவப் புராணங் களும் தேம்பாவணியும் கூட அவருக்குத் தெரியும்.

இவை மட்டுமல்ல, 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளின் புலவர்களால் பாடப்பட்ட யமகம், திரிபு, மடக்கைப் பாடல்களையும் படித்துப் பொருள் சொல்வார். அத்தகைய பாடல்களைப் படிப்பதிலும் அவற்றுக்குப் பொருள் சொல்வதிலும் உமறு நெய்னாப் புலவருக்கும் பண்டிதர் சவரிமுத்துவுக்கும் ஒரு குஷி. இத்தகைய பாடல்களை எங்கு தான் தேடிக் கண்டுபிடித்தார்களோ! எனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனாலும் அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருப் பதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பேன். ஒரு நாள் உமறுப்புலவர் என்னிடம் கேட்டார்.

“மலை மேவு வேங்கை பற்றி
வண்டுரை தேன் மணம்
மாலையாக வீங்கு உவந்து
வாசம் ஆளும் முல்லையார்
மாலையாக ஈங்கு வந்து
வாசம் ஆரும் முல்லையா..”

என்ற பாடலைப்பாடி இதற்குப் பொருள் தெரியுமா? ” என்று கேட்டார். “தெரியாது” என்றேன் நான்.

“தெரியாதா? இது உங்கள் சமயத்து இலக்கியம். தேவமாதா திருக்குழந்தையைப் பெற்ற பின்னர், பிறந்த குழந்தையை இடையர்கள் வந்து ஆராதிப்பதைச் சொல்லும் தேம்பாவணிப்பாடல் என்று சொல்லி அதன் பொருளை எனக்குத் தெளிவுபடுத்தினார். “வேங்கை மலர்களை வண்டு உண்ணாதிருப்பது போல, பொன்னாசையால் வரும் குற்றங்களை பெற்றிராத இடையர்கள் முல்லைப்பூமாலைகளைக் கொண்டு குகையின் எப்பக்கமும் நிறைந்தார்கள்”

அவர் பாடலுக்குப் பொருள் சொன்னதன் பின்னர்தான் வேங்கை என்பதற்கு பொன் என்றும் வண்டு என்பதற்கு குற்றம் என்றும் பொருள் இருப்பதாக எனக்குத் தெரியவந்தது. பிற்காலத்தில் தேம்பாவணியைப் படிப்பதற்கான என் ஆர்வத்தைத் தூண்டி விட்டவர் புலவர் உமறுநெய்னா ஆவார்.

இன்னமும் கூட தேம்பாவணி உரையுடன் கூடிய ஒரு பதிப்பு வெளிவரவில்லை. தேம்பாவணியில் கருக்லான பாடல்களைப் படிக்கும் போதெல்லாம் நான் உமறுப்புலவரை நினைத்துக் கொள்கின்றேன்.

தேம்பாவணி போன்ற காப்பியங்களில் மட்டுமல்ல, உலா, காதல், மடல் போன்ற சிற்றிலக்கியங்களையும் எனக்கு அறிமுகப்படுத்தியவர் உமறுநெய்னாப் புலவர்.

காலாயுதக் கொடியோன்
கை ஆயுத வழியே
மாலாயுதம் ஈன்ற
மாமணியைத் தானுகுத்தாள்.

என்ற வரிகளுக்கு அவர் பொருள் சொன்ன பிறகுதான் பிற்காலத்தில் நான் கூளப்பன் நாயக்கன் நாவலைப் படித்தேன்.

ஆனாலும் இப்படியான யமகம், மடக்குகளிலும் அட்டபந்தம், நாகபந்தம் போன்ற தளைகளிலும் தன்னைப் பறிகொடுத்து புதுமை இலக்கியத்திற்கு வரமுடியாதவராக தம்மை ஆக்கிக் கொண்டார் என்ற ஆதங்கமும் எனக்கு ஏற்படுகின்றது.

1947இல் நான் வசந்தம் மாத இதழ்களில் கவிதை எழுதியதைக் கண்ணுற்ற உமறுப்புலவர் யாப்பிலக்கணம் கற்கும்படி வற்புறுத்தினார். ஆனால் அவ்விலக்கணத்தை கற்பதில் அவ்வளவு சிரத்தை காட்டவில்லை. படிப்படியாக சிறுகதை, நாவல் எனத் தொடங்கி விட்டேன்.

ஆனாலும் உமறுநெய்னா அவர்களிடத்தில் மிக்க மதிப்பும் மரியாதையும் உடையவனாக இருந்தேன். அவர் 'மொடேன்' இலக்கியக் காரராக பத்திரிகைகளுக்கு எழுத வேண்டும் என்று விரும்பினேன்.

எழுதுவிக்க முயன்றேன். ஆனால் அவரை அப்படிச் செய்விக்க முடியவில்லை.

இந்நிலையில் தான் 1960களில் சீறாப்புராணத்தின் பதுறுப்படலம் சிரேஷ்ட பாடசாலை தராதர வகுப்புக்கு இலக்கிய பாடமாக நியமிக்கப்பட்டிருந்தது. இதை அறிந்து நான் மிகவும் வற்புறுத்தி அவரைக் கொண்டு அப்படலத்திற்கு பதவுரை, பொழிப்புரை, இலக்கண விளக்கம் என்பவற்றை எழுத விட்டு, அவரையும் அழைத்துக் கொண்டு கண்டிக்குச் சென்றேன். கு.வி.செல்லத்துரை புத்தகக் கடையினர் அதனை மிக மிக விரைவாக அச்சேற்றினரர்கள். உமறுநெய்னா அவர்களுக்கும் கணிசமான சன்மானம் கொடுத்தார்கள். இது ஒன்றே ஒன்றுதான் நூலுருவில் வந்த அவரின் ஆக்கமாகும்.

ஆனால் அவர் எவ்வளவோ பாடியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவர் உறவினர்களிடம் அந்த ஆக்கங்கள் உள்ளனவோ எனக்குத் தெரியாது. அவை முழுவதும் வெளிக்கொணரப்பட வேண்டும்.

அவை வெளிவந்தாலும் சரி வெளிவராவிட்டாலும் சரி, மூதூர் மண் பெற்றெடுத்த தமிழறிஞர்களில் உமறுநெய்னா அவர்களுக்கு விசேடமான ஓர் இடம் உண்டு. அவரிடம் இலக்கணமும் இலக்கியமும் கற்றவன் என்ற வகையில் நான் உண்மையாகவே பெருமைப் படுகின்றேன்.

தமிழ் இலக்கியங்கள் மீது கொண்ட அளவற்ற பற்றுதலின் காரணமாக அவர்தான் வாழ்ந்த (மூதூரின் கடற்கரையோர) பகுதிக்கு "நெய்தல் நகர்"" என்ற பெயர் சூட்டினார். அன்னாரின் நினைவாக இன்றும் அப்பெயர் நிலவி வருகின்றது.

(தினகரன்
01.02.1993)

# உமறு நெயினாப் புலவர்

மதார்சா மைமூன்நச்சியா தம்பதியரின் 2ஆவது மகனாக 1907 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12 ஆம் திகதி மூதூர், ஆனைச்சேனை என்னும் இடத்தில் பிறந்தார். இவர் எனது சிறிய தகப்பனுமாவார். இதன் காரணமாக எனது தகப்பனார் மூலம் இவரது இளமைக்கால நிகழ்வுகளையும் ஓரளவு அறிந்து கொள்ள முடிந்தது. இவரது பள்ளிப் பருவத்தில் இப்பகுதியில் பாடசாலைகள் இருக்கவில்லை. ஒரு சில இடங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன என்றும், குரு சிஷ்ய முறை பேணப்பட்டதாகவும், எண், எழுத்து, வாசிப்பு போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டதாகவும் மொழிப் பாடத்திற்கும் பெரும்பாலும் பண்டைய இலக்கிய, இலக்கண நூல்களே பயன்படுத்தப்பட்டன என்றும் அறியமுடிந்தது.

பத்திரிகைகளோ, உப பாடப்புத்தகங்களோ, உரை நடை இலக்கியங்களோ, இப்பிரதேசத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை. இக்கால கட்டத்தில் தான் மர்ஹூம் உமறு நெயினா புலவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். செய்யுள்களையும் இலக்கண சூத்திரங்களையும் மனனம் செய்து கற்க வேண்டியிருந்தமையினால் அவற்றின் விளக்கங்களை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிப் பண்டிதர்களையும் தமிழறிஞர்களையும் நாட வேண்டியிருந்தது. இதன்பொருட்டு சேனையூரில் பிரபல நாட்டு வைத்தியராகவும் திண்ணைப்பள்ளி ஆசிரியராகவும் இருந்த திருவாளர் பத்தினியன் பரிகாரி அவர்களிடம் சென்று இலக்கணம் கற்றார். பிரயாண வசதிகளும் மனித நடமாட்டமும் குறைவான அக்காலப் பகுதியில் தனிமையில் சென்று வரப்பயந்தமையால் தனது தகப்பனாரோடும் சில வேளைகளில் அவரது சகோதரரான எனது தகப்பனாரோடும் சென்று கல்வி கற்றதாகவும் கூறியுள்ளார்.

இதேபோன்று சிறிது காலம் மூதூரில் சவரிமுத்து பண்டிதர் அவர்களிடமும் இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிந்தார். பின்னர் திருவாளர் அருளப்பு றோச் டி வாஸ் அவர்களின் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தனது இடைநிலைக் கல்வியைப் பெற்றார். 1937 களில் அரசாங்கம் நடத்திய 'பிறிலிம்' பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தார்.

அக்காலத்தில் அரசினர் ஆரம்பித்த ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதால் கனிஷ்ட கல்வித்தரம் உடையவர்களும் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதற்கமைய மர்ஹூம் உமறு நெயினா அவர்களும் 1939 வைகாசி 4ந் திகதி ஆசிரியராக நியமனம் பெற்று தி/ சின்னக்கிண்ணியா அரசினர் பாடசாலையில் கடமையேற்றார். பின்னர் சம்பூர், தோப்பூர், மூதூர் ஆகிய இடங்களிலும் ஆசிரியராகச் சேவையாற்றியுள்ளார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களோடு சூடாமணி, நிகண்டு,யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் போன்ற செய்யுள் இலக்கண நூல்களையும் கற்றுப் புலமை பெற்றார். பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்றதோடு மரபுக் கவிதைகளையும் இயற்றத் தொடங்கினார். எனினும் இவரது பொருளாதார நிலை, குடும்ப நிலைமைகள் என்பன காரணமாக அவைகளை நூலாக்கம் செய்ய முடியாது போய் விட்டது.

எனினும் அக்காலப் பகுதியில் இடம்பெற்ற பாராயண நிகழ்வுகளில் பங்கு கொண்டு சீறாவுக்குப் பொருள் கூறி விளக்கமளித்து வந்தார். இதனால் மக்கள் மதிப்பையும் பெற்றார். அத்துடன் 18 ஆம் நூற்றாண்டுகளின் புலவர்களால் பாடப்பட்ட யமகம், திரிபு, மடக்கை போன்ற பாடல்களையும் பாடிப் பொருள் கூறி மகிழ்வடைந்தார்.


1959களில் 4 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான இஸ்லாம் மத பாடத்திற்காக 'இஸ்லாம் மத போதினி' என்ற நூலை வெளியிட்டார். இதே காலப்பகுதியில் கல்வி அமைச்சு க.பொ.த (சா/த) வகுப்பு முஸ்லிம் மாணவர்களுக்குச் சீறாப்புராணத்தின் பதுறுப் படலத்தை இஸ்லாமிய இலக்கியமாக அங்கீகரித்திருந்தது. அவ்வேளையில் சீறாப்புராணத்தைப் படித்துப் பொருள் விளங்கிக் கொள்வது மாணவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதை எடுத்துக் கூறியபோது அதை ஏற்றுக் கொண்டு பதுறுப்படலத்திற்கு பதவுரை, பொழிப்புரை, இலக்கண விளக்கம் என்பவைகளுடனான உரைநூலை எழுதினார்.

பின்னர் இந்நூல் கண்டி கலைவாணி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு ஜி.சி.ஈ (சா/த) பாடநூலாகவும் அங்கீகரிக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் மூதூர் நத்துவத்துல் உலமா சபையினர் வேண்டிக் கொண்டதற்கமைய புகாரிக் கந்தூரியைப் பற்றி "புஹாரிக் காவியம்" என்ற மகுடத்தில் எழுதிக் கொடுத்தார். இக்காவியம் உலமா சபை வெளியீடான "புஹாரி' சஞ்சிகையில் வெளியிடப்பட்டன.

1962களில் அவரது அந்திம காலத்தில் 'பெண் கல்வி', 'ஒழுக்க நெறிக்குறள், 'நீதிக் கவிதை' போன்ற கவிதை நூல்களையும் 'தமிழ் கணை' என்னும் இலக்கணத் தொகுதியையும் நேர அவகாசத்திற்கேற்ப கையெழுத்துப் பிரதியாக எழுதியிருந்தார். எனினும் அவைகள் முழுமை பெறமுன் நோய்வாய்ப்பட்டு 1963.11.12ந் திகதி இறையடியெய்தினார். (இன்னாலில்லாஹி). அவரது இழப்பு உறவினர்களுக்கு மட்டுமல்ல தமிழ் இலக்கிய உலகிற்கும் பேரிழப்பாகும். இலக்க ஆர்வலர்கள், தொகுப்பாசிரியர்கள் போன்றோர் அவரது ஆக்கங்களைத் தொகுத்து நூலுருவாக்கி வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**(ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஏ.சமது அவர்களின் 'கொட்டியாரப்பற்று வரலாறு' நூலின் ஒரு பகுதி)**

## இலங்கையர்கோன் அவர்களுக்கு புலவர் எழுதிய கடிதம்



மூதூர் தி/அல்-ஹிதாயா மகாவித்தியாலயம் உருவாகுவதற்கு புலவரே காரணமாவார். அப்போது மூதூர் காரியாதிகாரியாக (பிரதேச செயலாளர்) இருந்த இலங்கையர்கோன் அவர்களுக்கு புலவர் எழுதிய கடிதத்தின் (கவிதை) ஒரு பகுதியே இங்கு உள்ளது. (அவருடைய எழுத்துக்களையும் ஒப்பத்தையும் இதில் காணலாம்.)

# புலவரின் குடும்பம்

புலவர் உமறுநெய்னா 1907 மார்கழி மாதம் 08 ம் திகதி மூதூரில் தற்போது ஜாயா வீதி என அழைக்கப்படும் குளத்தடித் தெருப்பகுதியில் மதார்சா- ஆச்சும்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாக அவதரித்தார். பின்தன் குடும்பம் மூதூர் ஆனைச்சேனைப் பகுதியில் குடியேறி வாழ்ந்து வந்ததால் புலவர் உமறுநெய்னாரும் இளம்பராயத்தில் இப்பகுதியிலேயே வாழ்ந்தார். பின்னர் மூதூர் நெய்தல் நகர் (வேடன்கந்து) எனும் பகுதியில் குடியேறி தன் இறுதி வரை அங்கேயே வாழ்ந்தார்.

சமூக சேவையில் ஆர்வமுடைய புலவர் உமறுநெய்னார் இன்றைய அல்-ஹிதாயா மகாவித்தியாலயத்தை உருவாக்குவதில் முக்கிய இடத்தை வகித்தார். அதேபோல் ஆனைச்சேனையில் குர்ஆன் மத்ரசாவையும் முன்னின்று உருவாக்கினார். தன் தாயின் காணியை நெய்தல் நகர் ஹிழ்று முகைதீன் ஜும்மா பள்ளிக்கு நன்கொடையாக வழங்கினார்.

தன் ஆரம்பக் கல்வியை அருளப்பு வாத்தியார் நடத்திய திண்ணைப் பள்ளியில் கற்றார். பின் யாழ்ப்பாணத்தில் நான்கு வருடங்கள் கல்வி கற்று "தமிழ் இலக்கண வித்துவான்" என்ற பட்டம் பெற்றார்.

புலவருக்கு ஆண்பிள்ளைகள் இருவரும் பெண்பிள்ளைகள் நால்வரும் பிறந்தனர்.

01. யூ. செய்னுல் ஆப்தீன்
    (ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர்)
02. யூ. அப்துல் றெசிது
    (பிறப்பு-இறப்பு பதிவாளர்)
03. அப்துல் சமது ஜொஹறா உம்மா
    (ஜமியா நளீமியா ஏ.எஸ்.சபீக்கின் தாய்)
04. முகம்மது அனியா சுலைகா உம்மா
    (பிரதேசசெயலாளர் எம்.ஏ. நியாஸின் தாய்)
05. முகம்மது முகைதீன் சபியா உம்மா
    (எம்.எம்.ஏ. அனஸ்ஸின் தாய்)
06. முகம்மது புகாரி மர்சூக்கா
    (நகீப், நசுர்தீன் ஆகியோரின் தாய்.)

புலவரின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் பின்வருமாறு :

01. மீராசா
(அதிபர்களான எம்.ஏ.சமது, எம்.ஏ.பரீது ஆகியோரின் தகப்பன்)
02. கச்சுமுகம்மது
(கஸ்ஸாலி ஆசிரியரின் தாயின் தகப்பன்)
03. முகம்மது அனிபா
(காதர், குழந்தை உம்மாவின் தகப்பன்)
04. பாத்திமா
(எம்.எஸ்.நயிம், சட்டத்தரணியின் தகப்பனின் தாய்.)
05. செய்யதும்மா
(யூ.சமது அதிபரின் தாய்)

**தகவல் :- எம்.எம்.ஏ.அனஸ்**



# ஆசிரியரின் பிற நூல்கள்

1. இதய ஒலி (கவிதைத் தொகுதி
2. நடுக்கடலில் (சிறுகதைத் தொகுதி)
3. விடிவெள்ளி (அகில இலங்கை ரீதியில் முதற்பரிசு பெற்ற சிறுவர் நாவல்)
4. பாட்டி சொன்ன சிறுவர் கதைகள்
5. மரணத்தின்விளிம்பில் (சிறுவர் நாவல்)
6. வரலாறும் சமூகக் கல்வியும் தரம் - 11
7. வரலாறும் சமூகக் கல்வியும் தரம் - 10
8. செயலட்டை க.பொ.த (சா / த)
9. புவியியல் - தரம் -7
10. வரலாறு - தரம் -7
11. குடியுரிமைக் கல்வி - தரம் 7
12. புவியியல் - தரம் - 8
13. வரலாறு - தரம் -8
14. குடியுரிமைக் கல்வி - தரம் -8
15. புவியியல் க.பொ.த (சா / த)
16. புவியியல் - தரம் - 9
17. வரலாறு - தரம் -9
18. குடியுரிமைக் கல்வி -தரம் -9
19. புவியியல் - தரம் - 9
20. வரலாறு - தரம் 10
21. குடியியற் கல்வி - தரம் -10
22. புவியியல் -தரம் - 6
20. வரலாறு - தரம் 6
21. குடியியற் கல்வி - தரம் - 6
22. தியாகி (சிறுகதைத் தொகுதி)
23. மரணத்தின் விளிம்பில் (சிறுவர் நாவல்)
24. காட்டுராஜா (சிறுவர் நாவல்)

ISBN 978-955-1098-07-0
9 789551 098070

வானவில்